# சோதிடமலர்

## SOTHIDA MALAR




**உள்ளே!**

**வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?**

- ★ மாதபலன்
- ★ சோதிடம் கற்போம்
- ★ ஜன்ம இலக்கினம் (மகரம்)
- ★ தமிழ் ஈழம் மலருமா?
- ★ அதிஷ்ட எண் ஞானம்
- ★ மட்டுநகர் சோதிடமகாநாடு

இன்னும் பல

துந்துபி கார்த்திகை (16-11-82—15-12-82) ரூபா 3-00

# சோதிடமலர்

**மாத சஞ்சிகை**

ஆசிரியர்: பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா (சம்ஸ்கிருத பண்டிதர்)

மலர் 5 | துந்துபி ஸூ கார்த்திகை மீ (16-11-1982) | இதழ் 8


ப்ரபுல்ல நீல பங்கஜ ப்ரபஞ்ச காலிமப்ரபா
வலம்பி கண்ட கந்தலீ ருசிப்ரபத்த கந்தரம்
ஸ்மரச்சிதம் புரச்சிதம் பவச்சிதம் மகச்சிதம்
கஜச்சி தாந்தகச்சிதம் தமந்தகச்சிதம் பஜே | |

*[மலர்ந்த கருங்குவளை மலரின் கருமைநிற அழகால் (அணிந்த மாலையினால்) விளங்குகின்ற இரிய கழுத்தையுடையவரும், மன்மதனையழித்தவரும், முப்புரமெரித்தவரும், பிறவிப்பிணியை யழித்தவரும், தக்கனது யாகத்தையழித்து கஜாசுரனை அழித்தவருமாகிய மஹாதேவனைப் போற்றுகின்றேன்.]*

சரவணோத்பவ ஸ்கந்த நமோ நமோ
ஸ்வாமி பூதர வாச நமோ நமோ
பக்த ரக்ஷக நமோ நமோ நமோ—தேவசேனேச.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

## இந்த இதழில் .....................


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாள் எப்படி | ... 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் | ... 4 |
| 3 | கார்த்திகை மாதக் கிரகநிலை | ... 5 |
| 4 | கால ஹோரைகள் | ... 6 |
| 5 | கார்த்திகை மாத வானியற்காட்சி | ... 7 |
| 6 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? | ... 8 |
| 7 | அதிஷ்ட எண் ஞானம் | ... 17 |
| 8 | ஜன்ம லக்கினம் | ... 19 |
| 9 | தமிழ் ஈழம் மலருமா? | ... 23 |
| 10 | உங்கள் மச்சங்கள் | ... 24 |
| 11 | வியாழ மாற்றம் | ... 25 |
| 12 | இராகு கேது நிழல் கிரகங்களே | ... 29 |
| 13 | மட்டுநகர் சோதிடமகாநாடு | ... 30 |
| 14 | ஆய்வு மன்றம் | ... 32 |
| 15 | சோதிடம் கற்போம் | ... 34 |
| 16 | குறுக்கெழுத்துப் போட்டி | ... 36 |

# நாள் எப்படி?

கார் 1 செவ் (16-11-82) பிரதமை இ.10-04 வரை அனுஷம் - சித்தம் முழுவதும், ஸ்கந்தஷஷ்டி ஆரம்பம். பூமி சம்பந்தப்பட்ட கருமங்கள் செய்யலாம். ராகு 3-07 — 4-37

கார் 2 புத (17-11-82) துவிதீயை இரவு 11-58 வரை, அனுஷம் காலை 6-30 வரை, அமிர்தசித்தம். சுபகருமங்களை காலை 6-30க்குள் செய்யவும். ராகு 12-08 — 1-38

கார் 3 வியா (18-11-82) திரிதீயை பி. இ. 2-17 வரை, கேட்டை-மரணம் காலை 9-02 வரை, சுபகருமங்களை காலை 9-02ன் மேல் செய்க. ராகு 1-38 — 3-08

கார் 4 வெள் (19.11.82) சதுர்த்தி பி, இ. 4-54 வரை, மூலம்-அமிர்தம் பகல் 11-55 வரை. மத்திம சுபதினம். ராகு 10-39 — 12-09

கார் 5 சனி (20-11-82) பஞ்சமி-சித்தம் முழுவதும், பூராடம் பி. இ. 3-02 வரை, பி. இ. 3-02 இன் மேல் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 9-09 — 10-39

கார் 6 ஞா (21-11-82) பஞ்சமி காலை 7-39 வரை உத்தராடம் மாலை 6-12 வரை, அமிர்தம். ஸ்கந்தஷஷ்டி விரதம். முருகனை வழிபடுவதற்கு மிகச் சிறந்த தினம். பொதுச் சுபதினம். ராகு 4-40 — 6-10

கார் 7 திங் (22-11-82) ஷஷ்டி பகல் 10-19 வரை திருவோணம் இரவு 9-12 வரை, அமிர்தசித்தம். பொதுவாகச் சுபகருமங்கள் செய்யலாம். ராகு 7-40 — 9-10

கார் 8 செவ (23-11-82) ஸப்தமி - மரணம் பகல் 12-38 வரை, அவிட்டம் - சித்தம் இரவு 11-46 வரை, பகல் 12-38ன் மேல் அஷ்டமி. சுப கருமங்களை விலக்குக. ராகு 3-11 — 4-41

கார் 9 புத (24-11-82) அஷ்டமி பி. ப. 2-24 வ. சதயம் இரவு 1-44 வரை, சித்தாமிர்தம். அன்றாட கருமங்களை மட்டும் செய்க. ராகு 12-11 — 1-41

கார் 10 வியா (25-11-82) நவமி பி. ப. 3-26 வரை பூரட்டாதி பி, இ. 2-58 வரை, சித்தம். சுபகருமங்களை விலக்குக. ராகு 1-42 — 3-12

கார் 11 வெள் (26-11-82) தசமி பி. ப. 3-35வ. உத்தரட்டாதி பி,இ. 3-22 வரை, சித்தம். பொதுவாக சுபகருமங்கள் செய்யலாம். ராகு 10-42 — 12-12

கார் 12 சனி (27-11-82) ஏகாதசி பி, ப. 3-00வ. ரேவதி - மரணம் பி, இ. 2-59 வரை, ஸர்வ ஏகாதசி விரதம், சுபகருமங்களை விலக்குக. ராகு 9-12 — 10-42

கார் 13 ஞாயி (28-11-82) துவாதசி பகல் 1-39 வரை, பிரதோஷவிரதம். மாலை சிவதரிசனம் செய்க. சுபகருமங்களை விலக்குக. ராகு 4-43—6-13

கார் 14 திங் (29-11-82) திரயோதசி பகல் 11-32 வரை, பரணி - சித்தம் இரவு 12-10 வரை. கத்தரி நட மிக நன்று. ராகு 7-43—9-13

கார் 15 செவ் (30-11-82) சதுர்த்தசி காலை 8-53 வரை, அதன் மேல் பூரணை பி. இ. 5-51 வரை' கார்த்திகை இரவு 10-01 வரை சித்தாமிர்தம் திருக்கார்த்திகை, பூரணை விரதம், ஸர்வாலய தீபம் குமராலய தீபம் சுபகருமங்களை விலக்குக. ஒளி வடிவமாக இறைவனைத் தரிசிப்பதால் ஞானம் உண்டாகும். ராகு 3-14 — 4-44

கார் 16 புத (1-12-82) பிரதமை பி. இ. 2-35 வ ரோகிணி இரவு 7-31 வரை, சித்தம். விநாயக விரதாரம்பம். சுபகருமங்கள் செய்யலாம். ராகு 12-14 — 1-44

கார் 17 வியா (2-12-82) துவிதீயை இரவு 11-15 வரை, மரணம். யோகம் நன்றுயில்லை. புதிய கருமங்களை விலக்குக. ராகு 1-45 — 3-15

கார் 18 வெள் (3-12 82) திரிதீயை இரவு 7-58 வரை, சித்தம். அவசிய கருமங்களை பகல் 2-21 இன் மேல் செய்யவும். ராகு 10-45 — 12-15

கார் 19 சனி (4-12-82) சதுர்த்தி மாலை 4-55 வ. புனர்பூசம் பகல் 11-58 வரை, சித்தம் மா. 4-55 வரை, நாள் நன்றுயில்லை. ராகு 9-15 — 10-45

கார் 20 ஞா (5-12-82) பஞ்சமி - சித்தம் பகல் 2-12 வரை, பூசம் காலை 9-52 வரை. முக்கிய கருமங்களை பகல் 9-52க்கு முன் செய்க. ராகு 4-46 — 6-16

கார் 21 திங் (6-12-82) ஷஷ்டி பகல் 11-52 வரை, ஆயிலியம் - சித்தம் காலை 8-12 வரை சுபகருமங்களை விலக்குக. ராகு 7-47 — 9-17.

கார் 22 செவ் (7-12-82) ஸப்தமி பகல் 10-06 வ, மகம் காலை 6-59 வரை, சித்தம், பகல் 10-06 தொடக்கம் அஷ்டமி. ராகு. 3-17 — 4-47.

கார் 23 புத (8-12-82) அஷ்டமி காலை 8-51 வ. பூரம் காலை 6-20 வரை. அதன்மேல் உத்தரம் பி. இ. 6-13 வரை, அமிர்தசித்தயோகம். சுபகருமங்களுக்கேற்ற தினமன்று. ரா. 12-17 — 1-47

கார் 24 வியா (9-12-82) நவமி காலை 8-10 வரை. அத்தம் - சித்தம் முழுவதும். காலை 8-10-ன் மேல் நற்கருமங்களை மேற்கொள்க. ரா. 1-48—3-18.

கார் 25 வெள் (10-12-82) தசமி காலை 8-02 வரை அத்தம்-அமிர்தம் காலை 6-39 வ. காலை 6-39க்குள் நற்கருமம் செய்யலாம். ராகு 10-49—12-19.

கார் 26 சனி (11-12-82) ஏகாதசி காலை 8-28 வ. சித்திரை - மரணம் காலை 7-37 வரை, ஸ்வஏகாதசி விரதம். காலை 7-37-ன் மேல் சுபகருமங்கள் செய்யலாம். ராகு 9-19 — 10-49.

கார் 27 ஞா (12-12-82) துவாதசி பகல் 9-24 வ., சுவாதி - சித்தம் காலை 9-04 வரை. பிரதோஷ விரதம், மாலை சிவதரிசனத்தால் பாபங்கள் நீங்கும். ராகு 4-50 — 6-20.

கார் 28 திங் (13-12-82) திரயோதசி பகல் 10-48வ. விசாகம் - மரணம் பகல் 10-58 வரை. சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று. ராகு 7-50 — 9-20.

கார் 29 செவ் (14-12-82) சதுர்த்தசி பகல் 12-38 வரை, அனுஷம் - சித்தம் பகல் 1-17 வரை, அமாவாசை விரதம். பிதுர் தர்ப்பணத்தால் சந்தான விருத்தியுண்டாம். சுபகருமங்களை விலக்குக. ராகு 3-21 — 4-51

கார் 30 புத (15-12-82) அமாவாசை பகல் 2-49 வரை, கேட்டை - சித்தம் பி. ப. 3. 54 வரை. சுபகருமங்களை நீக்குக. ராகு 12-21 — 1-51

---

## கார்த்திகைக் காக்ஷிகள்

**ஸ்கந்த ஷஷ்டி விழா:-**

ஆறுமுகப்பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் ஆறுநாள் விழாவே ஸ்கந்தஷஷ்டி விழாவாகும். ஆஸ்விஜ (ஐப்பசி) மாத சுக்லபக்ஷப் பிரதமைத்திதி முதல் ஷஷ்டித்திதி வரை ஆறு நாளும் விரதநாளாக் அனுஷ்டிக்கப்படுகிறது. பிரதமை முதல் ஐந்து தினங்கள் வரை விசேட பூஜைகள் அபிஷேக ஆராதனைகள் செய்து ஆறுவது தினமாகிய ஷஷ்டியிலன்று சூரன்போர் உற்சவமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. முருகப்பெருமான் சூரனைக் கொன்ற அதாவது ஆன்மாக்களின் ஆணவ மலத்தை நீக்கிய தினமிதுவாகும். நல்லோரை அறக்கருணையாலும் தீயவரை மறக்கருணையாலும் ஆட்கொள்பவனே இறைவன். தவத்தினல் பல வரங்கள் பெற்ற சூரன் தீயவை செய்தபோதிலும் அவன் பாவியாகி விடக்கூடாது என்னும் கருணையால் தேவர்கள் வேண்டுதலுக்கிணங்கி அச்சூரனை ஆட்கொள்ளும் செயலாக முருகப்பெருமான் வேலாயுதத்தால் சூரனது மார்பைப்பிளந்து இரு கூறுக்கினர். அதில் ஒருபகுதி மயிலாகவும், மறுபகுதி சேவலாகவும் உருவானபோது மயிலைத் தனது வாகனமாகவும், சேவலை வெற்றிக் கொடியாகவும் தன்னுடன் சேர்த்தருளினர். இவ்வாறு நடைபெற்ற அருட்செயலை விளக்கும் வண்ணமே ஆலயங்களில் இச்சூரன்போர்விழா நடைபெறுகின்றது.

**திருக்கார்த்திகை:-**

கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நக்ஷத்திர தினம் திருக்கார்த்திகை எனச் சிறப்புப் பெயர் பெறுவதற்கு, அக்கினி நக்ஷத்திரம் என அழைக்கப்படும் இத்தினம் பூரணையுடன் சேர்வதும், முருகனின் நக்ஷத்திர விசேடம் பெற்றிருப்பதும், ஓர்காரணமாகும். பஞ்சபூதங்களில் அக்கினியைச் சிறப்பாகப் பிரீதி செய்து மகிழ்வது இத்தினத்தின் முக்கியமாகும்.

முருகன் ஆலயங்களில் கிருத்திகா தினத்திலும் மற்றும் கோவில்களிலும், இல்லங்களிலும் பூரணை (கிருத்திகா பூரணை) தினத்திலும் தீபமேற்றி ஒளியூட்டுவது போல எமதுள்ளமும் ஒளிப்பிழம்பாகத் திகழ வேண்டும் என்னும் குறிக்கோளையே இறைவன் ஒளிப்பிழம்பாகத் தோன்றிய இத்தினம் குறிக்கின்றது எனலாம்.

> "ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
> ஓடிப்போம் நமது உள்ளவினைகளே."

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### துந்துபி ஸ்ரீ கார்த்திகை மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (16-11-82 முதல் 15-12-82 வரை)

| இங் நவ | தமி கார் | வாரம் | விருச்சி ம.மி. முதல் (காலை) | விருச்சி ம.மி. வரை (காலை) | தனுசு ம. மி. வரை (காலை) | மகரம் ம. மி. வரை (பகல்) | கும்பம் ம. மி. வரை (பகல்) | மீனம் ம. மி. வரை (பி.ப) | மேடம் மி. ம. வரை (மாலை) | இடபம் ம. மி. வரை (மாலை) | மிதுன ம. மி. வரை (இரவு) | கடகம் ம. மி. வரை (இரவு) | சிங்கம் ம. மி. வரை (பி.இ) | கன்னி ம. மி. வரை (பி.இ) | துலாம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | செவ் | 6 08 | 8 20 | 10 28 | 12 24 | 2 08 | 3 51 | 5 40 | 7 43 | 9 54 | 12 02 | 2 03 | 4 01 | 6 05 |
| 17 | 2 | புதன் | 6 06 | 8 15 | 10 23 | 12 19 | 2 03 | 3 46 | 5 35 | 7 38 | 9 49 | 11 57 | 1 58 | 3 56 | 6 00 |
| 18 | 3 | வியா | 6 01 | 8 12 | 10 20 | 12 16 | 2 00 | 3 43 | 5 32 | 7 35 | 9 46 | 11 54 | 1 55 | 3 53 | 5 57 |
| 19 | 4 | வெள் | 5 58 | 8 07 | 10 15 | 12 11 | 1 55 | 3 38 | 5 27 | 7 30 | 9 41 | 11 49 | 1 50 | 3 48 | 5 52 |
| 20 | 5 | சனி | 5 53 | 8 03 | 10 11 | 12 07 | 1 51 | 3 34 | 5 23 | 7 26 | 9 37 | 11 45 | 1 46 | 3 44 | 5 48 |
| 21 | 6 | ஞாயி | 5 49 | 8 00 | 10 08 | 12 04 | 1 48 | 3 31 | 5 20 | 7 23 | 9 34 | 11 42 | 1 43 | 3 41 | 5 45 |
| 22 | 7 | திங் | 5 46 | 7 55 | 10 03 | 11 59 | 1 43 | 3 26 | 5 15 | 7 18 | 9 29 | 11 37 | 1 38 | 3 36 | 5 40 |
| 23 | 8 | செவ் | 5 41 | 7 51 | 9 59 | 11 55 | 1 39 | 3 22 | 5 11 | 7 14 | 9 25 | 11 33 | 1 34 | 3 32 | 5 36 |
| 24 | 9 | புதன் | 5 37 | 7 47 | 9 55 | 11 51 | 1 35 | 3 18 | 5 07 | 7 10 | 9 21 | 11 29 | 1 30 | 3 28 | 5 32 |
| 25 | 10 | வியா | 5 33 | 7 43 | 9 51 | 11 47 | 1 31 | 3 14 | 5 03 | 7 06 | 9 17 | 11 25 | 1 26 | 3 24 | 5 28 |
| 26 | 11 | வெள் | 5 29 | 7 39 | 9 47 | 11 43 | 1 27 | 3 10 | 4 59 | 7 02 | 9 13 | 11 21 | 1 22 | 3 20 | 5 24 |
| 27 | 12 | சனி | 5 25 | 7 35 | 9 43 | 11 39 | 1 23 | 3 06 | 4 55 | 6 58 | 9 09 | 11 17 | 1 18 | 3 16 | 5 20 |
| 28 | 13 | ஞாயி | 5 21 | 7 32 | 9 40 | 11 36 | 1 20 | 3 03 | 4 52 | 6 55 | 9 06 | 11 14 | 1 15 | 3 13 | 5 17 |
| 29 | 14 | திங் | 5 18 | 7 27 | 9 35 | 11 31 | 1 15 | 2 58 | 4 47 | 6 50 | 9 01 | 11 09 | 1 10 | 3 08 | 5 12 |
| 30 | 15 | செவ் | 5 13 | 7 24 | 9 32 | 11 28 | 1 12 | 2 55 | 4 44 | 6 47 | 8 58 | 11 06 | 1 07 | 3 05 | 5 09 |
| டிச 1 | 16 | புத | 5 10 | 7 20 | 9 28 | 11 24 | 1 08 | 2 51 | 4 40 | 6 43 | 8 54 | 11 02 | 1 03 | 3 01 | 5 05 |
| 2 | 17 | வியா | 5 06 | 7 15 | 9 23 | 11 19 | 1 03 | 2 46 | 4 35 | 6 38 | 8 49 | 10 57 | 12 58 | 2 56 | 5 00 |
| 3 | 18 | வெள் | 5 01 | 7 12 | 9 20 | 11 16 | 1 00 | 2 43 | 4 32 | 6 35 | 8 46 | 10 54 | 12 55 | 2 53 | 4 57 |
| 4 | 19 | சனி | 4 58 | 7 08 | 9 16 | 11 12 | 12 56 | 2 39 | 4 28 | 6 31 | 8 42 | 10 50 | 12 51 | 2 49 | 4 53 |
| 5 | 20 | ஞாயி | 4 54 | 7 04 | 9 12 | 11 08 | 12 52 | 2 35 | 4 24 | 6 27 | 8 38 | 10 46 | 12 47 | 2 45 | 4 49 |
| 6 | 21 | திங் | 4 50 | 7 01 | 9 08 | 11 04 | 12 48 | 2 31 | 4 20 | 6 23 | 8 34 | 10 42 | 12 43 | 2 41 | 4 45 |
| 7 | 22 | செவ் | 4 46 | 6 56 | 9 03 | 10 59 | 12 43 | 2 26 | 4 15 | 6 18 | 8 29 | 10 37 | 12 38 | 2 36 | 4 40 |
| 8 | 23 | புதன் | 4 41 | 6 53 | 9 00 | 10 56 | 12 40 | 2 23 | 4 12 | 6 15 | 8 26 | 10 34 | 12 35 | 2 33 | 4 37 |
| 9 | 24 | வியா | 4 38 | 6 48 | 8 55 | 10 51 | 12 35 | 2 18 | 4 07 | 6 10 | 8 21 | 10 29 | 12 30 | 2 28 | 4 32 |
| 10 | 25 | வெள் | 4 33 | 6 45 | 8 52 | 10 48 | 12 32 | 2 15 | 4 04 | 6 07 | 8 18 | 10 26 | 12 27 | 2 25 | 4 29 |
| 11 | 26 | சனி | 4 30 | 6 41 | 8 48 | 10 44 | 12 28 | 2 11 | 4 00 | 6 03 | 8 14 | 10 22 | 12 23 | 2 21 | 4 25 |
| 12 | 27 | ஞாயி | 4 26 | 6 37 | 8 44 | 10 40 | 12 24 | 2 07 | 3 56 | 5 59 | 8 10 | 10 18 | 12 19 | 2 17 | 4 21 |
| 13 | 28 | திங் | 4 22 | 6 33 | 8 40 | 10 36 | 12 20 | 2 03 | 3 52 | 5 55 | 8 06 | 10 14 | 12 15 | 2 13 | 4 17 |
| 14 | 29 | செவ் | 4 18 | 6 29 | 8 36 | 10 32 | 12 16 | 1 59 | 3 48 | 5 51 | 8 02 | 10 10 | 12 11 | 2 09 | 4 13 |
| **15** | **30** | புதன் | 4 14 | 6 25 | 8 32 | 10 28 | 12 12 | **1 55** | **3 44** | 5 47 | 7 58 | 10 06 | 12 07 | 2 05 | 4 09 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: கார்த் 30உ (15-12-82) பகல் 3 மணிக்கு என்னலக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (1-55 — 3-44) மேட லக்னம்

# கார்த்திகை மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| | | | ராகு |
| கும்பம் | கார்த்திகை மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம் | | | சிங்கம் |
| கேது நெ, குஜ | யூரே சுக், சூரி | குரு, புத, சனி | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரகமாற்றங்கள்

2உ (17-11-82) மாலை 7-18க்கு விரு-புத
10உ (25-11-82) பி. இ. 5-57க்கு விரு-குரு
17உ (2-12-82) காலை 6-06க்கு மகர-குஜ
21உ (6-12-82) இரவு 10-47க்குதனு-புத
22உ (7-12-82) இரவு 11-49 தனு - சுக்
28உ புதன் உதயம்
10உ குரு ,,
21உ சுக்கிரன் உதயம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கார்த் 3உ | (18-11-82) | காலை | 9-02 | முதல் | தனுசு |
| 5உ | (20-11-82) | இரவு | 9-49 | ,, | மகரம் |
| 8உ | (23-11-82) | பகல் | 10-32 | ,, | கும்பம் |
| 10உ | (25-11-82) | இரவு | 8-43 | ,, | மீனம் |
| 12உ | (27-11-82) | பி.இ. | 2-59 | ,, | மேடம் |
| 15உ | (30-11-82) | பி. இ. | 5-58 | ,, | இடபம் |
| 17உ | (2-12-82) | காலை | 6-13 | ,, | மிதுனம் |
| 19உ | (4-12-82) | காலை | 6-31 | ,, | கடகம் |
| 21உ | (6-12-82) | காலை | 8-12 | ,, | சிங்கம் |
| 23உ | (8-12-82) | பகல் | 12-14 | ,, | கன்னி |
| 25உ | (10-12-82) | மாலை | 7-04 | ,, | துலாம் |
| 27உ | (12-12-82) | பி. இ. | 4-27 | ,, | விருச்சிகம் |
| 30உ | (15-12-82) | பகல் | 3-54 | ,, | தனுசு |

### கிரகநிலை குறிக்க:-

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி கார்த்தி 30 உ பகல் 3-00 மணிக்கு மேட லக்னம் என அறிந்து கொண்ட பின் மேடம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

### மாதபலன்

இம்மாதம் அரசியல் வட்டாரங்களில் அரசபலம் வலுப்பெற்று நிற்கும்: எதிர்க்கட்சிகளின் பெலம் குன்றும். அரச வட்டாரம் தன் சொந்த அபிப்பிராயத்தை நடைமுறைப்படுத்தும்: வர்த்தகத் துறை சிறப்படையும்: கல்வியிலும் கூடிய கவனம் செலுத்தப்படும். நாட்டில் மழை வீழ்ச்சியும், பயிர் விருத்தியும் உண்டாகும். மக்கள் கவனம் ஆடம்பர வாழ்க்கையில் செல்லும். போக்கு வரத்து வசதிகள் அதிகமாகும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (கார்த்திகை மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6மணி 08 நிமிஷம்)

| வாரம் | 6...08<br>7...08 | 7...08<br>8...08 | 8...08<br>9...08 | 9...08<br>10...08 | 10...08<br>11...08 | 11...08<br>12...08 | 12...08<br>1...08 | 1...08<br>2 . 08 | 2...08<br>3...08 | 3...08<br>4...08 | 4.. 08<br>5...08 | 5.. 08<br>6...08 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்;**

யாழ். வானியற்கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல. 28

# கார்த்திகை மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

16-11-82 — 15-12-82

சூரியன்:- 16-11-82 பி.ப. 1-02ல் (நிரயன) விருச்சிக ராசிப் பிரவேசம்.

16-11-82 உதயம் காலை 6-08
அஸ்தமனம் மாலை 5-42

15-12-82 உதயம் காலை 6-21
அஸ்தமனம் மாலை 5-48

சந்திரன்:- 17-11-82 சந்திரதர்சனம்
24-11-82 பூர்வாஷ்டமி பி.ப. 2-24
30-11-82 பூரணை பி.இ. 5-51
8-12-82 அபரஅஷ்டமி காலை 8-51
15-12-82 அமாவாசை பி.ப. 2-49

### கிரகங்கள்

புதன்:- கிழக்கில் அஸ்தமனமடைந்திருந்த இக்கிரகம் 13-12-82ல் மேற்கே உதயமாவதால் அது வரை கண்ணுக்குத் தோற்றாது. 17-11-82ல் விருச்சிகராசிக்கும் 6-12-82-ல் தனுராசிக்கும் செல்கிறது.

சுக்கிரன்:- கிழக்கில் அஸ்தமனமடைந்திருந்த இக்கிரகம் 6-12-82ல் மேற்கில் உதயமாவதால் அதன் மேல் மேற்கு அடிவானத்தின் மேல் காட்சிதரத் தொடங்கும். 7-12-82ல் தனுராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்:- மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனத்தின் பின் மேற்கு வானத்தில் 48 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 40 பாகை உயரத்திற் காணப்படும். 1-12-82ல் மகர ராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்:- சென்ற மாதம் மேற்கில் அஸ்தமனமான இக்கிரகம் 25-11-82ல் கிழக்கில் உதயமாவதால் அதன்பின் கிழக்குவானத்தில் சூரியோதயத்தின் முன் அவதானிக்கலாம். 26-11-82ல் விருச்சிகராசியிற் (விசாகம் 4-ம் கால்) பிரவேசிக்கும் இக்கிரகம் 11-12-82ல் அனுஷம் 1-ம் காலில் பிரவேசிக்கிறது.

சனி:- மாதத் தொடக்கத்தில் கிழக்கு வானத்தில் உதயம்முன் 25 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 51 பாகை உயரத்தில் காணப்படும். 2-12-82ல் சுவாதி 1-ம் காலில் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus):- விருச்சிக ராசியில் அனுஷம் 3-ம் பாதத்திலும்.

வருணன் (Neptune):- தனு ராசியில் மூலம் 1-ம் பாதத்திலும்,

குபேரன் (Pluto):- துலா ராசியில் சித்திரை 3-ம் பாதத்திலும் சஞ்சரிக்கின்றன.

### சமாகமாதிகள்


11-12-82 காலையில் சந்திரனுக்குத் தெற்கு சனி $2\frac{1}{2}$ பாகை. உதயம் முன் பார்க்கவும்.

13-12-82 நண்பகல் சந்திரனுக்குத் தெற்கு வியாழன் $2\frac{1}{2}$ பாகை. உதயம் முன் பார்க்கவும்.

15-12-82 பார்சுவ சூரிய கிரகணம். இது இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் தோற்றாது. வடஇந்தியா, ஆசியாவின் ஏனைய பகுதிகள் ஐரோப்பா, வடகீழ் ஆபிரிக்கா ஆகிய இடங்களில் தெரியும்.

அறிவிப்பு:- வானியற் கழகத்தின் 3-ம் வருட 5-ம் கூட்டம் 21-11-82 பி.ப. 4 மணிக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்தில் நிகழும்.

வெகு விரைவில் வெளிவருகிறது!
**திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்**
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!




டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் **A. F. A.**

**16-11-82 முதல் 15-12-82 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவ்விராசிக்காரர்களுக்கு சூரியபகவான் லோக மூர்த்தியாக 8-ம் இடத்தில் வலம் வ்ருவதால் மேலும் கஷ்டங்கள் உருவாகும். அத்துடன் 8ல் உள்ள வியாழன் அவமரியாதையையும், பிணக்குகளையும் உண்டுபண்ணுவார். தூரதேச தொடர்புகளால் நஷ்டங்களும் பெற்றோர்வழி கவலைகளும் ஏற்படும். நீண்ட பிரயாணங்களைத் தவிர்த்தல் நன்று. தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். உறவினரால் தொல்லைகள் உண்டாகும். பணமுடை அதிகரிக்கும். சமூகசேவையில் ஈடுபட முடியாதவாறு தடைகள் தோன்றும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி சுக்கிரன் 8ல் சஞ்சரிப்பது இல்லறத்திற்கு உகந்ததல்ல. அட்டமத்து வியாழனும் புத்திர சுகயீனங்களைக் கொடுக்கும். கடன்பட வேண்டி நேரும். நற்காரியங்கள் தடைப்படும்.

வியாபாரிகட்கு புதன் 8ல் இருப்பதால் வியாபாரம் சிறக்காது. மாத முற்பகுதியில் எல்லாவித வியாபாரமும் மந்த நிலையிலிருக்கும். கள்ள மார்க்கட் வியாபாரத்தில் தொல்லைகள் ஏற்படும். வங்கிநிலை சீரற்று இருக்கும். மாத இறுதியில் சுக்கிரன் புதன் ஆகியவற்றின் தனு ராசிப் பிரவேசத்தால் வெளிநாட்டு வர்த்தகத்தில் நற்பலனை எதிர்பார்க்கலாம்.

விவசாயிகளுக்கு சனி 7ல் இருப்பது நன்றல்ல. தகராறுகள் மேலும் வளரும். பயிர் செழிப்படையாது. புதிதாகப் பயிரிடுதலும் நன்மைதராது. நீதிமன்றம் சம்பந்தமான விடயங்களில் தவணை போடுதல் நல்லதல்ல.

தொழிலாளர்கட்கு எவ்விதத்திலும் நன்மையில்லை. கூட்டுறவில் பிளவுகள் தோன்றும். 7ல் சனி இருப்பதால் பங்குத் தொழிலாளரின் உதவி கிட்டாது. தொழில் விருத்தி, தொழில் வாய்ப்பு என்பன கிடையாது, முதலாளிகள் அனுசரணை இல்லை.

மாணவர்கட்கு வெளிநாட்டுக் கல்வியில் தடங்கல் ஏற்படும். கல்வியில் முன்னேற்றமில்லை. கலைத்துறை, விளையாட்டுத் துறையிலும் அக்கறையிராது. நேர்முகப் பரீட்சைகளில் சித்தி கிட்டாது.

பெண்களுக்கு காதல் தோல்வி, அவமானம் சர்வசாதாரணமாகி விடும். பெரியோர்களுடன் பகைப்பதால் காரியம் தடைப்படும். விவாகப் பேச்சுக்களில் சிக்கல்கள் தொடரும். விவாகமான வர்களுக்கு கணவனின் ஒத்துழைப்புக் கிடைக்காது. தொழில் பார்ப்போருக்கு வேலைப்பளு அதிகமாகும்.

அதிஷ்ட நாட்கள்:- நவ23பி.ப,24,25மு.ப.
டிச8பி.ப,9,10மு.ப.

துரதிஷ்ட நாட்கள்:- நவ16,17,25பி.ப,26,27.
டிச13,14,15மு.ப.



## இடபம்

கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசிரிடம் 1,2-ம்கால்

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு சூரியபகவான் தாம்ரமூர்த்தியாக 7ல் வலம் வருவதால் நன்மைகள் அதிகமில்லை. 6ல் சனி நன்மையளிப்பினும் தேகாரோக்கியம் இடைக்கிடை பாதிப்படையும். 8ல் செவ்வாய் விபத்துகள், ஆயுதபயம் என்பனவற்றைத் தரும். கையிலுள்ள பணம் கரைந்துவிடும். சமூகசேவையில் அதிகம் ஈடுபடினும் அதிகம் நற்பெயர் கிடைக்காது. பிரயாணங்கள் லாபம் தராது. திடீர் நஷ்டங்களும் ஏற்படலாகும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானத்தில் ராகு 2-ம் அதிபதி புதன் 7,8-ம் இடங்களில் சஞ்சாரம் செய்வது சிறப்பாகவில்லை. மன முறிவுகள் தோன்றும். தாரத்திற்கு அபாயம் ஏற்படலாம். புத்திரரால் தொல்லைகள் மிகும். 5ல் வியாழன் கடன் வசதிகளைத் தரும்.

வியாபாரிகட்கு புதனின் நற்பார்வை இல்லாததால் வியாபார வளர்ச்சிக்கு இடமில்லை. வங்கி வசதிகள் அதிகம் கிடைப்பினும் 8ல் செவ்வாய் எதிர்பாராத நஷ்டங்களைத் தரும். புதிய முதலீடுகள் நன்றல்ல. கள்ளமார்க்கட் வியாபாரம் கஷ்டத்திற்குள்ளாக்கும். பங்கு வியாபாரிகள் அவதானமாக இருக்கவும்.

உத்தியோகத்தர்கட்கு 7ல் உள்ள சூரியனால் நன்மையில்லை. கடன்பட்டு வாழ்க்கை நடத்துவீர். கடின உழைப்பிலும் நற்பெயர் கிட்டாது. கருமங்கள் திருப்திதராது. தலைகுனிந்து நடக்கவும். காலம் பதில் சொல்லும்.

விவசாயிகட்கு விவசாயி சனி 6ல் சிறப்பாயினும் பொருளாதார ரீதியில் வளர்ச்சி குறைவடையும். புதுப்பயிர் நட வசதிகள் இல்லை. கடின உழைப்பால் மனம் சோர்வடையும்.

தொழிலாளிகட்கு முயற்சிக்கேற்ற லாபம் இல்லை. செய்யுந் தொழிலே தெய்வம் என்றுகடமையைச் செய்யவேண்டியதுதான். எதிர்பாராத தொழில் நஷ்டங்கள் ஏற்படலாம்.

மாணவர்கட்கு சுக்கிரன், புதன் ஆகிய இரு கிரகங்களின் சஞ்சாரம் நன்றாக அமையவில்லை. கடின முயற்சி தேவை. நேர்முகப் பரீட்சையில் தோற்றுவது நன்றல்ல. வெளிநாட்டுக் கல்வியும் சிறப்பில்லை, கலைத்துறையிலும் நாட்டமிராது.

புதன், சுக்கிரன் சேர்க்கையால் பெண்களுக்கு காதல் எண்ணங்கள் அதிகரிக்கும். தாம்பத்திய வாழ்வில் நாட்டமுண்டாகும். பெற்றோரை மதிக்கமாட்டீர்கள். விவாகமானவர்களின் குடும்ப செலவுகள் கட்டுக்கடங்காதிருக்கும்.

அதிஷ்ட நாட்கள்:- நவ25பி.ப,26,27.
டிச10பி.ப,11,12.

துரதிஷ்ட நாட்கள்:- நவ18,19,20,28,29.
டிச15பி.ப.



# மிதுனம்

மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இவர்கட்கு சூரியன் 6ல் சுவர்ண மூர்த்தியாக ராஜபவனி வருவதால் பல நன்மைகள் அடைவீர்கள். எண்ணியிருந்தது ஈடேறும். தொழில் ரீதியான பயணங்கள் மேற்கொள்ளுவீர்கள். இனபந்து சேர்க்கையால் பல நன்மைகள் ஏற்படும். வியாழன் 6ல் இருப்பதால் சேவை மனப்பான்மை அதிகமாகும். ஆரோக்கியம் சிறப்பாகவிருக்கும். வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்படும். பொருளாதாரம் வளர்ச்சியடையும். பண வருவாய் திருப்திதரும்.

குடும்பஸ்தர்கட்கு 7ல் செல்வாய், நெப்டியூன், கேது ஆகிய கிரகங்கள் சேர்வதால் களஸ்திரசுகம் ஏற்படும். குடும்பத்தில் அமைதி நிலவும். பொருள் பண்டங்கள் சேரும். புத்திர லாபங்களில் ஏற்பட்ட தடைகள் நீங்கும். உறவினர் உதவிகள் கிடைக்கும்.

வியாபாரிகட்கு செட்டி புதன் 6ல் இருப்பது மாத முற்பகுதியில் லாபந்தராவிடினும் பிற்பகுதி லாபகரமாகவிருக்கும். வியாழன் வங்கி உதவிகள் கிடைக்க வழிசெய்வார். வெளிநாட்டு வர்த்தகம் நன்மைதரும். கள்ளமார்க்கட் வியாபாரமும் நன்மையளிக்கும்.

விவசாயிகட்கு சனி 5ல் உச்சமடைவதால் விவசாயம் வெற்றியளிக்கும். பயிர் நடுதல் சம்பந்தமான நடவடிக்கைகள் நன்மை தரும். தகராறுகள் சமாதான தீர்வு பெறும். தானியவகை விற்பனை லாபமளிக்கும்.

தொழிலாளர்கட்கு நீண்டகால முயற்சிகளின் பெறுபேருக செய்தொழில் விருத்தியேற்படும். சொந்த தொழில் ஆரம்பிக்க வாய்ப்பு உண்டு. பங்காளரும் பயப்படத் தேவையில்லை. கூட்டுறவாளர் சனீஸ்வரன் கிருபையால் மிகுந்த லாபம் காண்பர்.

மாணவர்கட்கு வித்யாகாரகன் புதன் 6,7-ம் இடங்களில் இருப்பினும் கவலையடையத் தேவையில்லை. வர்த்தகத்துறை கல்விபயிலுவோர் முன்னேற்றமடைவர். வெளிநாட்டுக் கல்விக்கு சிறப்பான மாதம். கலைத்துறையில் நன்மையுண்டு.

பெண்களில் கன்னியர் காதல் லீலைகளில் அதிகம் ஈடுபடுவார்கள். விவாகப் பேச்சுக்கள் வெற்றியளிக்காது. குடும்பப் பெண்கள் கீழ்ப்படிந்து ஒழுகின் கணவனின் அன்பைப் பெறலாம்.

அதிஷ்ட நாட்கள்:- நவ16,17,28,29.
டிச13,14,15மு.ப.

துரதிஷ்ட நாட்கள்:- நவ21,22,23மு.ப,30, டிச1.



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

சூரியபகவான் இவ்விராசியினர்க்கு 5ல் இரஜதமூர்த்தியாக பவனி வருதலால் ஓரளவு நன்மைகளை எதிர்பார்க்கலாம். வியாழன் எண்ணிய கருமங்கள் கைகூட வகை செய்வர். பணக் கஷ்டம் சிறிது குறையும். சுக்கிரன் புதன் சேர்க்கை கலாசார நடவடிக்கைகளில் ஈடுபாட்டை அதிகரிக்கும். தேகாரோக்கியம் சுமாராகவிருக்கும். பெற்றோர்வழி நன்மைகள் உண்டாகும். 4ல் சனி அலைச்சலின்மேல் நன்மை தருவார். இனபந்துக்கள் நற்கருமங்களில் கலந்துகொண்டு சிறப்பிப்பர்.

குடும்பஸ்தர்கட்கு சூரியன் திரிகோணத்தில் இருப்பதால் இல்வாழ்க்கையில் சந்தோஷத்தைக் கொடுப்பான். 4ல் சனி சுற்றுடலில் அமைதியை கெடுக்க முனைவான். புத்திரர் தொல்லைகள் குறைவடையும். பொருளாதாரம் முன்னேற்றமடையும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல் வாதிகளால் சலுகைகள் கிடைக்க சூரியன் உதவிபுரிவார். நன்மாற்றங்கள், பதவியுயர்வுகள், தடைப்பட்ட வருமதிகள் கிடைக்க வழியுண்டாகும். சகாக்கள் கீழ் உத்தியோகத்தர்களின் பூரண உதவி கிடைக்கும்.

விவசாயிகட்கு சனி 4ல் மிகுந்த வேலைப்பளுவைக் கொடுத்தாலும் பயிர் செழிப்படைந்து விவசாயம் மேலோங்கும். வயல் தகராறுகள் நீங்கும். கடன்பட்டு முதலீடு செய்தாலும் அறுவடை காலத்தில் தக்கபயன் கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தி யடையும். சகாக்களுடன் சிறு பிணக்குகள் தோன்றிமறையும். கூட்டுறவுத் தொழிலில் நன்மையுண்டு. பணவருவாய் திருப்தியளிக்கும். புதுத் தொழில்கள் அலைச்சலின்மேல் கிடைக்கும்.

மாணவர்கட்கு மிகுந்த ஞாபகசக்தி உண்டாவதால் கல்வியில் முன்னேற்றமுண்டாகும். கலைத் துறையில் வெற்றிகள் கிட்டும். தூரதேசக் கல்வியில் அனுகூலமடைவது சுலபமாகவிருக்கும். நேர்முகப் பரீட்சைகள் சாதகமாக இருக்கும்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்கள் தடைகளின்மேல் நிறைவேறும். காதல் கிளர்ச்சிகளதிகரிக்கும். கர்ப்பிணிகளுக்கு சிறுசிறு உபாதைகள் ஏற்படும். தொழில்பார்க்கும் பெண்கள் கரைச்சல்களுக்குள்ளாவர். பொருளாதார வளர்ச்சி குறைவாகவே இருக்கும்.

அதிஷ்ட நாட்கள்:- நவ18,19,20,30, டிச1,15பி.ப.
துரதிஷ்ட ,, நவ23பி.ப,24,25மு.ப,டிச2,3



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இவர்களுக்கு சூரியன் 3ல் லோகமூர்த்தியாக சஞ்சாரம் செய்வதால் தொடர்ந்து கஷ்டங்களையே தருவார். சுக்கிர புதன் சஞ்சாரங்கள் சுற்றாடலில் அமைதியைப் பேணுவர். 5ல் உள்ள செவ்வாய் எண்ணிய கருமங்கள் நிறைவேறத் தடையாக இருப்பர். உறவினர் கொண்டாட்டங்கள் நன்மைதராது. தேகசுகம் பாதிப்படையும். பிரயாணங்களில் நன்மையேற்படாது. வெளிநாட்டுத் தொடர்புகள் குறைவடையும். செலவுகள் கட்டுக்கடங்காது. பொருள் பண்டங்கள் அழிவு ஏற்படும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி புதன் நற்சஞ்சாரம் செய்வதால் அதிகம் பாதிப்பில்லை. புத்திர லாபங்கள் ஏற்பட வழியில்லை. கடன் தொல்லைகள் குறைந்தபாடில்லை. மதிப்பு, மரியாதை என்பன பாதிக்கப்படும்.

வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்பாக நடந்தாலும் முதலீட்டுக்கு ஏற்றவருவாய் கிடைப்பரிது. வங்கி வசதிகள் குறைவடையும். வர்த்தக விஸ்தரிப்புகள் நன்மை தராது. புதிய வியாபார முயற்சிகட்கும் உகந்ததல்ல. அழகு சாதனப் பொருட்கள் வியாபாரம் ஓரளவு நன்மைதரும்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் 4ல் இருப்பதால் எவ்வித நன்மையும் ஏற்படாது. நினைத்த கருமங்கள் தவிடுபொடியாகும். கடந்தகால முயற்சிகள் பலனளிக்காது. கடமையைச் சரிவரச் செய்வதில் சிக்கல்கள் உண்டாகும்.

விவசாயிகட்கு சனி 3ல் இருப்பதால் உற்சாகத்துடன் உழைக்க வைப்பார். செவ்வாய் 5ல் காணித்தகராறுல் நஷ்டத்தை ஏற்படுத்தும். பயிர்ச் செய்கையில் வெற்றிகிட்ட காலதாமதமாகும்.

தொழிலாளிகட்கு கடின உழைப்பை சனி உண்டுபண்ணுவார். வேலைக்கேற்ற ஊதியம் கிடையாது. தொடங்கும் தொழில் திறம்பட செய்ய முடியாது. கூட்டுறவிலும் ஒற்றுமை இருப்பினும் முன்னேற்றம் இராது. தொழில் வாய்ப்புகள் நழுவிப்போகும்.

மாணவர்கட்கு உள்ளூர்க் கல்வியிலும் வெளியூர்க் கல்வி லாபந்தரும். கலை விளையாட்டுக்களில அபார வெற்றி கிடைக்கும். நேர்முகப்பரீட்சை தொழில்வாய்ப்புகளுக்கு உகந்தகாலமல்ல. கல்விக்கூடத்தை காதற் கூடமாக மாற்ற முனைவர்.

பெண்களுக்கு காதல் விவகாரங்கள் தலைதூக்கினும் வெற்றி கிடைப்பதரிது. களியாட்டங்களில் பணம் விரயமாகும். விவாகப்பேச்சுகள் கைகூடாது. விவாகமானவர்கள் தெய்விக வழிபாட்டின் மூலம் குடும்ப அமைதியைப்பேணவும்.

அதிஷ்ட நாட்கள்:- நவ21,22,23மு.ப, டிச2,3
துரதிஷ்ட ,, நவ25பி.ப,26,27. டிச4,5,6மு.ப.



## கன்னி

உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2- கால்

கன்னிராசியில் ஜனனமானவர்க்கு சூரியன் 3ல் தாம்ரமூர்தியாக வலம் வருகிறார். ஏழரைச்சனி கடைக்கூறு நடைபெறுகிறது.

4இல் செவ்வாய் சஞ்சரிக்கிறார். ஆதலால் சகல துறையிலும் கவலைக்குரிய விதத்திலேயே கருமங்கள் நடைபெறும். 3இல் சுக்கிர புதன் சேர்க்கை சகோதரவாஞ்சையைக் கூட்டும். திடீர் பயணங்கள் ஏற்பட்டு செலவுகள் அதிகமாகும். ஆரோக்கியம் கெடும். பெற்றோர் வழி மனக்கவலைகள் உண்டாகும். சகல முயற்சிகளையும் பின்போடுதல் நன்று.

குடும்பஸ்தர்க்கு 2இல் உள்ள சனி வருமானத்தை தடைபண்ணுவார். புத்திரலாபமும் கிடைக்கவழியில்லை. சகோதரவழி கொண்டாட்டங்களால் மனவேறுபாடுகள் உதயமாகும். துக்ககரமான செய்திகள் கிடைக்கும்.

வியாபாரிகட்கு முன்னேற்றம் சிறிதுமில்லை. முதலீடுகள் கரைந்து போகும். வங்கி உதவிகள் கிடைப்பது தாமதமாகும். வியாபாரஸ்தலத்தில் நஷ்டங்கள் ஏற்படும். பங்கு வியாபாரிகளிடையே மனக்கசப்பு உருவாகும். கடன் பாக்கிகள் வசூலாவது கஷ்டம்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் ஸ்தானபலம் பெற்றிருப்பதால் அந்தஸ்து பேணப்படும். பலவித இடைஞ்சல்களுக்கு மத்தியிலும் கடமையைச் சரிவரச் செய்வீர்கள். சனி 2இல் இருப்பது வாக்கு சாதுரியத்தைப் பாதிக்கும்.

விவசாயிகட்கு சனி 2இல் தாமத பலனைத் தருவார். பூமித்தகராறுகள் அதிகமாகும். தோட்டவேலைகள் அதிக செலவைக் கொடுக்கும். அயலவரின் உதவிகள் கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு மிக மந்தமான மாதம். தொழில் வாய்ப்புகள் தடைப்படும். கூட்டுறவில் பூசல்கள், தொழிலதிபரின் ஒத்துழைப்பின்மை, சகதொழிலாளரிடையே மனக்கசப்புகள் ஆகியன ஏற்படலாகும். பங்குத் தொழிலும் நட்டம் தரும்.

மாணவர்கட்கு மாத பிற்பகுதியில் கல்வியில் ஊக்கம் ஏற்படும். கலை விளையாட்டுகளில் அக்கறையுண்டாகும். வெளிநாட்டுக் கல்விக்குச் சிறப்பான மாதம். காதல் விளையாட்டுக்கள் அதிகரிக்கும். நேர்முகப் பரீட்சையில் சித்தியில்லை.

பெண்களுக்கு தனுராசியில் புத சுக்கிர சேர்க்கை காதல் எண்ணங்களிலேயே காலத்தை கழிக்க வைக்கும். செவ்வாயுடன் சேர்வதால் குழப்பங்களுக்கு குறைவிராது. விவாகப்பேச்சுக்கள் கைகூடாது. விவாகரத்துகள் ஏற்படலாம். குடும்பத்தில் கணவனின் ஆதிக்கம் கூடும்.

அதிஷ்ட நாட்கள்:- நவ23பி:ப,24,25மு.ப.
டிச4,5,6மு.ப.
துரதிஷ்ட ,, நவ28,29,டிச6பி.ப,7,8மு.ப.




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.

துலாராசியைச் சார்ந்தவர்களுக்கு இரஜத மூர்த்தியாக சூரியன் 2ல் வலம் வருவதால் தனக் கஷ்டம் குறையும். 3ல் செவ்வாய் சகோதரவழி கஷ்டங்களைத் தருவார். 9ல் ராகு இருப்பது பிதுர்வழியாலும் தூரதேசத்தாலும் நன்மைகள் கிடைக்க ஏதுவாகும். பிரயாணங்கள் அதிகரித்து செலவுகள் அதிகமாகலாம். ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். வாக்கு வசிகரம் உண்டாகும். கடும் முயற்சியின்மேல் நற்பயன் அடைவீர்கள். கடிதத் தொடர்புகள் நற்பலன் தரும்.

குடும்பஸ்தர்கட்கு 2ல் சூரியன், வியாழன், யுரேனஸ் ஆகியன சஞ்சரிப்பது பணவருவாயைக் கூட்டும். இனசன விரோதங்கள் உங்களை ஒன்றும் செய்யாது. முதியோர் உதவிகள் கிட்டும். களத்திர சுகம் உண்டு.

வியாபாரிகட்கு புதன் 3இல் இருப்பதால் வியாபாரம் நன்றாக நடந்தாலும் லாப மேற்படாது. போட்டி பொறாமையால் தொல்லைகள் தோன்றும். முதலீடுகள் போதிய வருவாய் தராது. வங்கிநிலை சுமாராகவிருக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 2ல் மூர்த்தி பலம் பெற்றிருப்பதால் பல நன்மைகளை எதிர்பார்க்கலாம். குறுக்கு வழிகளில் காரியசித்தி ஏற்படும். சொந்த முயற்சியால் முன்னேற ஜன்ம ராசிச்சனி உதவுவார். 3-ல் செவ்வாய் சுற்றுப் பயணங்களுக்கு தடையாக இருக்கும்.

விவசாயிகட்கு கடின உழைப்பின் மேல் பயிர்ச்செய்கை வளம்பெறும். கோடு சம்பந்தமான இடங்கள் சாதகமாக இருக்கும். விவசாயத்தில் செலவீனங்கள் குறைவாக இருக்கும். விவசாய விருத்தி சம்பந்தமாக ஆலோசனை செய்ய நல்ல மாதம்.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தியுண்டு. புதுத்தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். கூட்டுற

வுத் தொழிலில் வளர்ச்சி காண்பீர்கள். முதலீடு செய்து ஆரம்பிக்கும் தொழில்கள் சீராக இயங் கும்.

மாணவர்கட்கு 3ல் புதன், சுக்கிரன் சஞ்சா ரம் செய்வது பரீட்சைகளுக்கு சாதகமாக அமை யும். ஞாபகசக்தி அதிகரித்து கல்வியில் ஊக்க முண்டாகும். தொழில்வாய்ப்புகளும் கிடைக்கும்.

பெண்களுக்கு 3ல் செவ்வாய் அயலவருடன் வாக்குவாதங்களை உண்டாக்கும். விவாகப் பேச் சுகள் சாதகமாகும். தொழில் பார்ப்போர் ஆதா யம் காண்பர். நற்கருமங்கள் கைகூடும். விவாக மானவர்களுக்கு குடும்பத்தில் சந்தோஷம் உண் டாகும்.

அதிஷ்ட நாட்கள்:- நவ25பி.ப,26,27.
டிச6பி.ப,7,8மு.ப.

துரதிஷ்ட ,, நவ30, டிச1,8பி.ப,9,10மு.ப.



## விருச்சிகம்

விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

சூரியபகவான் இவ்விராசிக்காரருக்கு ஜென்ம ராசியில் சுவர்ண மூர்த்தியாக பவனி வருவது நற்பலன்களை எதிர்பார்க்கக் கூடியதாக இருக் கும். 2ல் செவ்வாய், கேது வாக்குவாதங்கள் பணச் செலவுகளை உண்டாக்கினும். இறுதியில் சுமுக மான நிலை உண்டாகும். வருமானத்தில் அதிக ரிப்பு ஏற்படும். ஆரோக்கியம் சிறப்படையும். ஏழரைச்சனி ஆரம்பித்திருப்பினும் கவலையடைய வேண்டியதில்லை. சிறிது அலைச்சலைக் கொடுத்தா லும் திட்டமிட்டபடி கருமங்கள் நிறைவேறும்.

குடும்பஸ்தர்கட்கு நன்மையான பலன்கள் உண்டு. வருமானம் செலவீனங்களைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். 2-ம் அதிபதி ஜன்மராசி யில் வாக்குவன்மை, காரியசித்தி ஆகியவற்றைக் கொடுப்பான். இனபந்துக்களுடன் கொண்டாட் டங்கள் சந்தேகத்தை ஏற்படுத்தும்.

வியாபாரிகட்கு புதன் 2ல் அமைவது மிக விசேடம். 2ல் சுக்கிரன் வருமானத்தை அதிகரிப் பர். முதலீடுகள் பலனளிக்கும். கள்ள மார்க்கட் வியாபாரமும் லாபம் தரும். வங்கி நிலையும் திருப் தியளிக்கும். அலங்காரப் பொருட்கள் அதிகம் விற்பனையாகும். பங்காளிகளிடையே சிற்சில கல கங்கள் தோன்றலாம்.

உத்தியோகத்தர்கட்கு ஜன்மராசியில் மூர்த்தி பலமடைவது தொழில் மேன்மையளிக்கும். அர சியல் லாபங்கள் கிடைக்கும். அந்தஸ்தில் உயர் வடைவீர்கள். 2-ல் செவ்வாய் கடும் வார்த் தைப் பிரயோகத்தை உண்டுபண்ணும். மேலிடத் திலிருந்து உதவிகள் கிடைக்கலாம்.

விவசாயிகட்கு அலைச்சல் அதிகரிப்பினும் வீண்போகாது. கடன் தொல்லைகள் நீங்கும். செவ்வாய் பூமிகாரகனுக தனஸ்தானத்திலிருப் பதால் வயல்தகராறுகள் ஏற்பட்டு ஈற்றில் சமாதானமான தீர்வை ஏற்படுத்தும்.

தொழிலாளர்கட்கு புதுப்புது தொழில்கள் உங்களை நாடிவரும். செய் தொழில் சிறக்கும். சகதொழிலாளரின் ஒத்துழைப்பு கிடைக்கும். சனி 12ல் இருப்பதால் கூட்டுறவுத் தொழிலில் மிகுந்த உற்சாகம் காட்டுவீர்கள்.

மாணவர்கட்கு புதன் திக்பெலம் பெறுவ தால் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கலை விளையாட்டுக்களில் நற்பெயர் கிடைக்கும். காதல் கிளர்ச்சிகள் தோன்றிலும் கல்வியைப் பாதிக்காது. நேர்முகப் பரீட்சையில் வெற்றி கிடைக்கும். விஞ்ஞானத்துறையில் சாதனை புரி வீர்கள்.

பெண்களில் கன்னியர்களுக்கு விவாகப் பேச்சுக்கள் மும்மரமாக இருக்கும். பெண் தேடி போட்டி போட்டுக்கொண்டு வருவர். காதலர் களுக்கு கனிவான காலம். குடும்பப்பெண்கள் கணவனுடன் உல்லாச வாழ்வில் மிதப்பர்.

அதிஷ்ட நாட்கள்: நவ 28, 29, டிச 8 பி.ப,9, 10 மு.ப

துரதிஷ்ட நாட்கள்; டிச 2, 3, 10 பி.ப 11'12



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1ம் கால்

இவ்விராசியில் ஜனனமானவர்கட்கு சூரியன் 12ல் உலோகமூர்த்தியாக வலம் வருவதால் நற் பலன்களை எதிர்பார்க்க முடியாது. 11ல் சனி

சஞ்சாரத்தை தவிர மற்றைய கிரகநிலைகள் சாத கமானதாக இல்லை. பெரியோர்களுக்குக் கீழ்ப்படி யாது காரியத்தைக் கெடுத்துவிடுவீர்கள். முற் கோபத்தால் இனசன விரோதங்கள் ஏற்படும். கௌரவம் பாதிப்படையும். செலவுசெய்ய கையில் பணமிராது. தலைவலி சம்பந்தமான நோய்கள் தோன்றும். பிரயாணங்களில் அவசரப்பட்டு கருமங்களைப் பாழடிப்பீர்கள்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி 10ல் உச்சமடைவது சிறிது நன்மை தரும். களத்திர வழி குழப்பங்கள் ஏற்படும். பணவசதியின்மையால் வீடு வாசல் சம்பந்தமான அவசர செலவுகள் ஏற்பட்டு கடன் தொல்லைகள் தோன்றும்.

உத்தியோகத்தர்கள் கடந்தகால நன்மைகளை அனுபவிக்க முடியாது. கவலைகள் அதிகரிக்கும். மேலிடத்தில் எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது. இடமாற்ற சிந்தனைகள் மன அலைச்சலை உண்டாக்கும்.

வியாபாரிகட்கு மாதபிற்பகுதியில் திக்பெலமடைந்தாலும் அதிக நன்மை ஏற்படாது. வங்கி கணக்குகளில் பிணக்குகள் தோன்றும். கள்ள மார்க்கட் வியாபாரமும் நன்மை தராது. பங்காளிகள் பிரிவினையை நாடுவர். அழகு சாதன ஆடம்பர வியாபாரம் சிறிது நன்மை தரும்.

விவசாயிகட்கு 11ல் சனியால் இயன்ற உதவிகள் கிடைக்கும். காணித் தகராறுகள் முடிந்தபாடில்லை. புதிய பயிர்நடுதலுக்கும் உகந்த காலமாக இல்லை. கடும் முயற்சியின்மேல் சிறிது நன்மை கிடைக்கும்.

தொழிலாளர் மேன்மையடைவது கடினம். தொழில் வாய்ப்புகள் நழுவிக்கொண்டேபோகும். செவ்வாய் 1ல் இருப்பதால் நற்கருமங்களையெல்லாம் கெடுத்துவிடுவார்.

மாணவர்கட்கு புதன் திக்பெலமடைந்தாலும் முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். மறதி சற்று அதிகமாகும். கலை ஈடுபாட்டால் கல்வியில் பாதிப்பேற்படும். கவலையீனப் பிழைகள் பரீட்சையில் சித்தியடைதலைத் தடுக்கும்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுகள் இழுபறி நிலையிலிருக்கும். தொழில் பார்ப்போர் கசப்பான அனுபவங்கள் காண்பர். கணவனின் அனுசரணை கிடைக்காது. களியாட்டங்களால் பணச்செலவு அதிகமாகும்.

அதிஷ்ட நாட்கள்:- நவ30, டிச9, 10பி.ப, 11, 12.
துரதிஷ்ட ” நவ16, 17, டிச4, 5, 6மு.ப, 13, 14, 15மு.ப.



# மகரம்

**உத்திராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2**

ஜன்மராசியை மகரமாக உடையவர்கட்கு சூரியன் 11ல் சுவர்ண மூர்த்தியாக பலம் பெறுவது கடந்த சில காலமாக எதிர்நோக்கிய சிக்கல்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக இருக்கும். லாபஸ்தானத்தில் சூரியன் மூர்த்திபலம் பெறுவதால் தனவருவாய்க்குத் தடங்கலிராது. தேகசுகம் நன்ருக இருக்கும். இலக்கினதிபதி 10ல் உச்சமடைவதால் எடுத்தகருமங்கள் வெற்றியளிக்கும். இனத்தவர்களாலும் அரச உதவிகளாலும் முன்னேற்றம் காண்பீர்கள். சமூகசேவையில் அந்தஸ்து உயர்வடையும். நீண்டகாலத் திட்டங்களை நிறைவேற்ற ஓர் அரிய சந்தர்ப்பமாகவிருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு ஒருவித குறையுமிராது. புத்திரலாபங்கள் அளவுக்கதிகமாகக் கிடைக்கும். பணமுடை தோன்ருது. கலையார்வம் மிகுதியாகும். சீர்திருத்த வேலைகளில் பணத்தை செலவு செய்வீர்கள்.

வியாபாரிகள் தங்கள் தங்கள் துறையில் வீறுநடை போடுவர். வியாபாரஸ்தலங்கள் விஸ்தீரணமடையும். வங்கிநிலையில் மகிழ்ச்சியுண்டாகும். கைவிட்ட வியாபாரங்கள் மறுபடியும் புதுப்பிக்க முடியும். வெளிநாட்டு வர்த்தகர் கொள்ளைலாபமடைவர்.

உத்தியோகத்தர் அந்தஸ்தில் உயருவார்கள். மேலதிகாரிகளிடம் உங்கள் செல்வாக்கு பலன் தரும். கடமையில் நற்பெயர் கிடைக்கும். கடன் தொல்லைகள் நீங்கும்.

விவசாயிகள் பயிர்ச்செய்கையில் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபடுவர். வயல்வேலைகளில் அதிகம் செலவுகள் ஏற்படாது. காணிபூமிச் சேர்க்கைக்கு சந்தர்ப்பம் உண்டு.

தொழிலாளர்கட்கு கடும் உழைப்பின் மேல் நற்பெயர் கிடைக்கும். சகதொழிலாளரால் லாபங்கள் ஏற்படும். பங்குத் தொழிலாளர் இலாபம் காண்பர். 12ல் செவ்வாய் சிறிது ஆயுதபயத்தைத் தரும்.

மாணவர்கட்கு கல்வியில் ஆர்வமுண்டாகும். 11ல் வியாழன் கலைத்துறையில் புகழ் கிடைக்க வழிசெய்யும். நேர்முகப் பரீட்சைகளில் சித்தி கிட்டும். தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

பெண்களுக்கு காதல் விவகாரங்கள் கை கூடும். தொழில் பார்ப்போர் சம்பள உயர்வு காண்பர். குடும்பப் பெண்களுக்கு கணவனின் உதவிகள் தாராளமாகக் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 16. 17, டிச 2, 3, 13, 14, 15, மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: நவ 18, 19, 20, டிச 6 பி.ப, 7, 8, மு.ப, 15 பி.ப




அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1. 2, 3ம் கால்

கும்பராசிக்காரருக்கு சூரியன் 10இல் தாம்ர மூர்த்தியாகச் சஞ்சரிப்பதால் நன்மைகள் அதிகம் ஏற்படாது. திக்பெலம் பெற்ற சூரியன் வியாழனுடன் இருப்பதால் தெய்வீக கடாட்சம் காரியங்கள் இனிதே கைகூட வழிவகுக்கும். 11 இல் செவ்வாய் இன பந்துக்களிடையே மனவேறுபாடுகளை உண்டாக்கும். பெற்றோர் வழி நற்செய்திகள் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புகள், பயணங்கள் மந்தநிலையிலிருக்கும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படும். சமூகத்தில் செல்வாக்கு உண்டாகும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி 10-ல் இருப்பதால் பிரச்சனைகளில் இருந்து உங்களைப் பாதுகாப்பார். கடன்தொல்லைகள் குறையும். களத்திர சுபமேற்படும். புத்திரர்வழி முன்னேற்றங்கள் அதிகமாகும். குடும்பச்சிறப்பிற்கு அறிஞர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும்.

வியாபாரிகள் புதனின் சஞ்சாரத்தால் நற்பலன்களை எதிர்பார்க்கலாம். கள்ள மார்க்கட் வியாபாரம் லாபம்தரும். அலங்காரப் பொருட்கள் அதிகம் விற்பனையாகும். வங்கி உதவிகள் கிடைக்கும். பங்காளிகள் தொல்லை நீங்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியனின் சஞ்சாரத்தால் ஒரு குறையுமிராது. வியாழன் கௌரவம், கீர்த்தி, முதலியவற்றை அளிப்பான். அரசியல் செல்வாக்கு சாதகமாக அமையும். 10-ல் வியாழன் சிறுமாற்றங்களை உண்டுபண்ணும்.

விவசாயிகட்கு உச்சம் பெற்றசனி விவசாய வளர்ச்சிக்கு சாதகமாக இருக்கும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். காலநிலை சாதகமான பலனைத்தரும். பயிர் செழிப்புடன் வளரும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தியுண்டாகும். வேலைவாய்ப்புகளும் நாடிவரும். கூட்டுறவுத்துறையில் வளர்ச்சியை எதிர்பார்க்கலாம். அரச மானியங்கள் கிடைக்க வழியுண்டு.

மாணவர்கள் கல்வியில் ஊக்கத்துடன் ஈடுபட அறிவாளிகளின் உதவி கிடைக்கும். உயர்கல்வி, வெளிநாட்டுக்கல்வியில் நல்லமுன்னேற்றங்கள் ஏற்படும். கலை விளையாட்டுக்களிலும் உங்கள் பெயர் பளிச்சிடும். நேர்முகப்பரீட்சையில் சாதகமானபலன் உண்டு.

பெண்களுக்கு 10-ல் சுக்கிரன் இருப்பது கலைக்கூடமாக அலங்கரிக்க உதவுவார். எதிர் பாலாரின் எண்ணங்கள் உங்கள் பக்கம் திரும்பும். விவாகப் பேச்சுகள் கைகூடும். தொழில் அந்தஸ்து உயரும். கணவனின் அன்பும் ஆதரவும் பெருகும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 18, 19, 20 டிச 4, 5, 6 மு. ப. 15 பி.ப.

துரதிஷ்ட நாட்கள்: நவ 21, 22, 23 மு. ப. டிச 8 பி.ப. 9, 10 மு.ப.




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி.

இவ்விராசியில் பிறந்தவர்கட்கு சூரியன் இரஜதமூர்த்தியாக பவனி வருவதால் அதிக கஷ்டங்கள் ஏற்படாது. 10-ல் செவ்வாய் தொழிலையும் அந்தஸ்தையும் பாதுகாக்கும். 9-ல் வியாழன் தூரதேச தொடர்புகளில் இருந்த தடையை நிவிர்த்தி செய்யும். தேகசுகம் சுமாராக இருக்கும். நீண்ட பயணங்களில் நன்மையுண்டாகும். இனபந்துக்கள் சேர்க்கையால் அதிக நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. கருமங்கள் செவ்வனே நடந்தேற தெய்வ அருள் கிடைக்

கும். தொழில்வளர்ச்சிக்கான திட்டங்கள் மேற் கொள்ள சிறந்த காலமாக இருக்கும். அட்டமத் துச்சனியால் அதிகம் பாதிப்பில்லை.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி 10-ல் திக் பெலம் பெறுவதால் குடும்பத்தில் அந்தஸ்து உயர்வடையும். 4-ல் ராகு சற்று அமைதியின்மை யைத் தரும். வியாழன் 9-ல் புத்திர சுகங்களைத் தருவார். சமயத்தலைவர்களின் ஆசிகள் கிடைக் கும்.

வியாபாரிகட்கு புதனின் சஞ்சாரம் வியா பாரவளர்ச்சிக்கு உறுதுணைபுரியும்; முதலீட்டிற் கேற்ற வருவாய் கிடைக்கும். வெளிநாட்டு வர்த்தகத்திற்கு விசேடமானகாலம். வங்கிவசதி கள் போதியளவு கிடைக்கும். தேங்கிக்கிடந்த பொருள்களெல்லாம் விற்பனையாகிவிடும்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் மூர்த்திபல மடைவதால் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கும். இடமாற்றங்கள் சாதக மாக அமையும்.

விவசாயிகளுக்கு சனி 8-ல் நஷ்டத்தை ஏற் படுத்த முனைந்தாலும் வியாழன் பயிர்வளம் குன்றாமல் பாதுகாப்பார். கூட்டுறவுப்பண்ணை விவசாயிகள் லாபம் காண்பர். கருமங்களில் சற்று அவதானந்தேவை.

தொழிலாளர்கட்கு குழப்பம் மிகுந்த மாதம். தொழில்வாய்ப்புகள் இனசன விரோதிகளால் நழுவிப்போகும். 9-ம் இடத்து சுக்கிரன், வியா ழன், சூரியனால் செய்தொழில் ஓரளவு விருத்தி உண்டு. கூட்டுறவில் அதிகம் முன்னேற்றமில்லை.

மாணவர்கட்கு கல்வியில் பிரச்சனைகள் மத் தியில் முன்னேற்றம் ஏற்படும். பரீட்சைகளில் சித்தியெய்த வழியுண்டு. விளையாட்டுக்களிலும் வெற்றியுண்டாகும். வெளிநாட்டுக்கல்வி நற் பலனளிக்கும்.

பெண்களுக்கு 8-ல் சனி விவாகத்தில் தடை களை உருவாக்குவார். தொழில்பார்ப்போருக்கு வருமானம், அந்தஸ்தில் உயர்ச்சி காணப்படும். விவாகமானவர்கள் அலங்காரச் செலவுகளால் பணத்தை விரயமாக்குவர்.

அதிஷ்ட நாட்கள்: நவ 21, 22, 23 மு.ப.
டிச 6 பி.ப., 7, 8 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: நவ 23 பி.ப. 24, 25, மு. ப.
டிச 10பி.ப. 11, 12.

# பிறந்த திகதிப்படி

## உங்கள் திறமை சாமர்த்தியம்

வே. சின்னத்துரை, நல்லூர்

நீங்கள் எந்த வருடத்திலாயினுஞ்சரி, எந்த மாதத்திலாயினுஞ் சரி ஏதோ ஒரு திகதியில் பிறந்திருப்பீர்கள். பிறக்கும் ஒவ்வொரு திகதிக் கும் ஒரு பலனுண்டு. பரவலாக அவற்றை இங்கே கூறுவாம்.

## திகதி 29-ல் பிறந்தவர்கட்கு

நீர் ஓர் உட்பார்வையுள்ள நபர். உம்மு டைய மூளை வேலைகளை உமக்கு நன்ருகத் தெரி யும். மனசார நீர் நேர்மையானவர். ஏகாந்த மாகவிருந்து தத்துவஞானசாத்திரத்தை ஆராய் பவராதலால் உமக்குத் துணையோ அல்லது ஆடம்பரங்களோ தேவையற்றன. நீர் எந்தக் காரியத்திலும் ஒரு தனித்துவ முறையை பின் பற்றுகிறதினுல் உமக்கு நீரே சட்டம் வகுப்ப வராவீர். நண்பர்கள் என்று நீர் கருதுபவர்க ளுக்கு உமது ஆழ்ந்த சிந்தனை வரவேற்பளிக் கும். நீர் உமக்களிக்கும் கௌரவத்தை அப்ப டிப்பட்ட நண்பர்களுக்கு மரியாதையும் கௌர வமும் அளிப்பீர். தனித்துவமே மேலோங்கி நிற்கும். உம்முடைய தரத்திற்கு அவர்கள் குறைந்துவிட்டால் நிரந்தரமாகவே அவர்களை நீர் நிராகரித்துவிடுவீர்.

உம்முடைய எண்ணங்களையும் பிரதிபலன் களையும் சோதனை செய்யும் நீண்ட பழக்கம் இருப்பதால் கற்பனை லீலைகளை நீர் எதிர்ப்பீர். உம்முடைய குடும்பத்தாருக்காகவே நீர் மிக வும் பாடுபடுவீர். எப்பாடுபட்டும் அவர்களுக்கு ஓர் குறைபாடுமில்லாது அவர்களைச் சந்தோஷ மாக வைத்திருப்பீர். அன்பு என்பது மிக அந்தரங்கமாக விளங்கிக்கொள்ளவேண்டியது.

11ல் செவ்வாய் நிற்கவும், சுக்கிரனும் புதனும் கூடி லக்கினத்தில் அமரவும், சந் திரன் 9-ம் இடத்தில் இருக்கவும் அமைந்த ஜாதகருக்கு எண்ணிறைந்த காணி பூமிகள் உண்டாம்.

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா — கொழும்பு-11.

**பிறப்பு எண்ணும், கூட்டு ஒற்றை எண்கள் உள்ளவர்களுடைய பலன்கள்:**

**1 - 1** திடீர் கோபி, முன்னேற்றமானவர்கள், அரசாங்கப்பகுதி, கணக்குப்பகுதி, மருத்துவப்பகுதி, அரசியல் தொடர்பு என்பன இருக்கும். கவர்ச்சிகரமான இவர்கள் கவலையீனம், மறதி காரணமாக அடிக்கடி சிறுசிறு தவறுகளைச் செய்து அகப்பட்டு மேலதிகாரிகளால் கண்டிக்கப்படுவர். குடும்பசுகம் குறைவு. இனஜன விரோதம் சர்வசாதாரணமாகும்.

**1 - 2** மனோ உடல் சக்தி மிக்கவர்கள். புகழ்பெற்றவர்கள், எக்காரியத்திலும் திறமைசாலிகளாக இருப்பார்கள். ஆனால் அடிக்கடி சலன புத்தி குறுக்கிட்டு சந்தேகப்படுத்தியபடி இருக்கும். குடும்ப வாழ்வில் பலவிதமான போராட்டங்களினால் களைத்துப்போய் விடுவார்கள். இனஜனங்கள் இவரைத் தூற்றியபடியே இருப்பர். அரசாங்கம், வியாபாரத் தொடர்பிருக்கும். எழுத்துத் துறையில் சிறப்படையலாம். அதிகார இடங்களில் பதவிகளிலிருப்பர். எதிலும் அதிககாலம் நிலைத்துநிற்கமாட்டாத இவர்களுக்கு இனஜனத் தொடர்பு இருந்தபடியே இருக்கும். சமயத் தொடர்பு இருக்கும்.

**1 - 3** திடீர் கோபம், திடீர் அன்பு, அரசாங்கத் தொழில், வைத்தியத் தொழில், சமய சாஸ்திரங்களில் தொடர்பு என்பன அமையும். வயது ஏறஏற புகழும் பொருளும் பெருகும். நடுவயதில் வயிற்றில் சுகயீனங்கள் அடிக்கடி ஏற்படும். குடும்பச் சச்சரவு ஏற்படும். நிர்வாகத் தன்மை விவேகம், திடீரென எதையும் அறியும் ஆற்றல் என்பன இருக்கும். நடுவயதிற்குப் பின்பு ஆலோசனைகள் சொல்லி எல்லோரையும், வாழ வழிகாட்டுவர். வருங்காலத்தில் தனக்கென ஓரிடம் பிடிக்கும் இவரை காலகதியில் எல்லோரும் போற்றி மதித்து வருவர்.

**1 - 4** படபடப்பு மிகுந்திருக்கும். எந்தவிசயத்திலும் உடனே முடிவு கண்டுவிட வேண்டுமெனத் துடிப்பர். சுதந்திர தாகமிருக்கும். உள்ளூரப் பயமிருக்கும். ஆனால் வெளியில் மற்றவர்களை அதட்டி, அதட்டி தமது காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். சகோதரங்கள் அரசாங்கத் தண்டனை அடைவர். வழக்கு, வம்புகளால் சொத்து, பொருள் அழியும். 50 வயதிற்கு மேல் அரசாங்கத் தண்டனை கிடைக்கலாம். தொழில் நுட்ப, வியாபாரம் சிறப்பைத்தரும்.

**1 - 5** வசீகரமான தேகஅமைப்புக் கொண்டவர்கள். எல்லோராலும் கவரப்படுவர். கணிதம் தொழில் நுட்பம், கட்டிட என்ஜினியர் வங்கி போன்ற தொழில்கள் சிறப்பைத் தரும். சாஸ்திர மந்திரத் தொடர்பு இருக்கும். எதையாவது கண்டுபிடிப்பதாயின் சக்கரைப் பொங்கல் சாப்பிடுவது போன்றதாகும். பதுங்கியிருந்து பாய்ந்து தமது காரியங்களைச் சாதிப்பர். வியாபார ஆசை அடிக்கடி அலைமோதும். அரசாங்க அதிகார இடங்களின் தொடர்பிருக்கும். நுண்ணறிவு படைத்தவர்கள். புத்திசாலிகள். எவரையும் இலகுவில் கணித்துவிடும் இவர்கள் உயர் பதவி, பீடங்களில் அதிகாரிகளாக இருப்பர். இவர்கள் வயது ஏறஏற புகழ்பரவும். ஆனால் திடீரென பொருள் வரவு, நண்பர்களின் தொடர்பால் சிற்றின்பம் காணச் சென்றிடுவர். கொடிகட்டிப் பறந்த இவர் மானம் பொருள் அழிந்து எதிரிகளால் பழிக்கும் நிலையை அடையக்கூடும். தெய்வபக்தியால் திரும்ப நல்ல நிலையை அடைய முயற்சிக்கவும்.

**1 - 6** காதலிப்பர், இடையில் முறிவு, பிரிவினைகளால் வருந்துவர். வீரியசக்தி குறைந்தவர்

கள். குடும்பவாழ்வு பிரச்சினைக்குரியது. இரத்த வியாதி இருக்கும். நடிப்பு, வைத்தியம், ஆயுதங்கள் மூலம் பொருளீட்டலாம். சங்கீதம், பத்திரிகை, வானொலி, நவீன விஞ்ஞானத் தொடர்பு என்பவற்றில் பொருளீட்டுவர். பொருளில் கவனம் தேவையானதாகும்.

**1 - 7** சலனப்புத்தி படைத்தவர்கள். விதி வசப்பட்ட பலன்கள் வாழ்வில் குடும்பத்தில் இடம்பெறும். குடும்பத்தவர் ஏசுவர். தனித்து தொழில் பெரிதாக செய்யமுடியாது. தொழில் நுட்பம், உற்பத்தியால் மாத்திரம் சிறப்பான பலன்கள் ஏற்படும். திருப்தியற்ற வாழ்வு, அடிக்கடி மனவேதனையும், கேவலமான வாழ்வும் அமையலாம். தெய்வபக்தி சிறப்பைத் தரும்.

**1 - 8** இளமையில் காதல் வரப்பட்டு எதிர்ப்புகளுக்கு மத்தியில் திருமணம் செய்திடுவர். சோதனைமேல் சோதனை தொடர்ந்து வரும். அறிவு ஆற்றல் இருந்தும் பிரயோகிக்கமுடியாது. வீட்டில் வைத்த தீபம் போன்று இருப்பர். அதட்டிப்பேசி காரியங்களைச் சாதிப்பர். கோபம் வந்து பெரியவர்களைப் பழித்துப் பகைமையைச் சம்பாதித்துக்கொள்வர். உழைப்பது மிஞ்சாது. உலோகம், மருந்து, அரசியல் அடிமை வேலைகள் செய்வர். செய்யும் தொழிலில் திருப்தியீனங்கள் ஏற்படும். இனஜனவிரோதம் ஏற்படும். 50 வயதிற்கு மேல் நோய் நொடிகளால் வருந்துவர். தந்தையால் உதவி குறைவு. இரத்த வியாதி, இரத்தத்தில் நஞ்சுத்தன்மை இருக்கும். மனைவி மக்களுடன் பிரச்சினைப்பட்டாலும் அவர்களுக்கு ஏதும் துன்பம் ஏற்பட்டால் பொறுக்க மாட்டார்கள்.

**1 – 9** பிடிவாதம், நிர்வாகம், படபடப்புத் தன்மை, போராட்ட வாழ்வு என்பன அமையும். பாவத்தொழில், பாவகாரியங்கள் செய்வர். எக்காரியத்திலும் நிதானமாயிருக்கும். அதிகம் பேசமாட்டார். பேசினால் எல்லோரும் வாயடைத்திடுவார்கள். சமூகம் இவர்களை அடிக்கடி தூற்றும். ஆரம்பத்தில் நிலையற்ற தன்மை ஏற்படும். உடம்பில் பாதிப்பு ஏற்படும். இவர்கள் பிறந்த குடும்பத்தினரால் இவருக்கு ஒருவிதத்தில் கடும் பாதிப்பு ஏற்படச்செய்யும். சகோதர உதவியால் இடைக்கிடை மன ஆறுதல் ஏற்படும். வைத்தியத்துறை, நிர்வாகத்துறை, இராணுவம், பொலீஸ் ஆகியவற்றிலும் தொழில் அமையும்.

**அதிஷ்ட திகதிகள்**

1, 10, 19 ; 2, 11, 20, 7, 16, 25 என்பனவாகும். மேலும் 4, 13, 22, 31-ம் திகதிகளில் விதி வசப்பட்ட சம்பவங்களும் சாதாரணமாகத் திருமணம், தொழில், கல்விச் சிறப்பும் 8, 26-ம் திகதிகளில் கஷ்டப் பலன்களும் பொதுவாக நடக்கும்.

அதிஷ்டவாரம் — ஞாயிறு, புதன், திங்கள் கிழமைகளாகும்.

அதிஷ்டநிறம் — வெள்ளை, மஞ்சள். (இந்த நிறங்களுடைய பொருட்களையும், உடுப்புக்களையும் பாவிக்கவும்.)

அதிஷ்ட இரத்தினம் — மஞ்சள் புஷ்பராகம், மஞ்சள் வைரம், மாணிக்கம், தங்கம். (வெள்ளியையும் பாவிக்கலாம்.)

அதிஷ்டக் கற்களை அணிவதால் உடலிலுள்ள நோய்கள் நீங்கும். மேற்சொல்லப்பட்ட இரத்தினங்களில் ஒன்றைப் பாவிப்பதால் சூரியனின் சக்தி அதிகரிக்கும். இதனால் உயர்ந்த பதவிகள் முன்னேற்றங்கள் தேடிவருவதுடன் மனோவலிமையும் குடும்ப ஒற்றுமையும் நிலவும்.

**1-ம் எண்ணில் பிறந்த சில பெரியவர்களின் பெயர்களும் திகதிகளும்**

ஜிம்மி காட்டர் (அமெரிக்காவில் 39வது ஜனாதிபதி) 1-10-1924. 1&9

திப்பு சுல்தான் (முன்னாள் இந்திய சாம்ராச்சிய மன்னர் 1-12-1751. 1&9

நேரு 10-10-1902. 1&5

ஸ்ரீமதி இந்திராகாந்தி (இந்தியப் பிரதமர்) 19-11-1917. 1&3

முக்கியகுறிப்பு:

சோதிடமலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

# ஜன்ம லக்கினம்

## மகர லக்னம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அ. சிவசுப்பிரமணியம், B.A. (Lond) மல்லாகம்

மகரலக்னகாரர்களின் குணதிசயங்களை ஆராய்வாம். பொதுவாக ஒவ்வொரு லக்கினத்தினதும் அடிப்படைச் சிறப்பியல்புகள் அந்த லக்கினத்தின் பிரதான சுபயோகக் கிரகங்கள் அடையும் உயர்வில் தங்கியுள்ளதென்றும் அவற்றின் தூய்மையற்ற சஞ்சாரம், சம்பந்தம், உயிர்உடல் நிலை ஆகிய சில அமைப்பினுல் பொதுப் பலன்களின் தன்மை ஓரளவு பாதிக்கப்பட்டுச் சில துராசாரமான குணதிசயங்கள் ஏற்படுமென்றும் கூறற்பாலதாயினும் தற்போது பிரதானமாக மகரலக்கினத்தில் குண விசேஷங்களையே அதன் விதிமுறைப்படி தெளிவாகப் பெருமளவு ஆராய்ச்சி செய்து விவரிக்க முற்பட்டுள்ளோம். மகரலக்கினத்தில் ஜனனமானவர்கள் பொதுவாகப் பால்ய வயதில் பலவீனராகவும் சதைப்பிடிப்பின்றி ஒல்லியாகவும், எலும்புந்தோலுமாகவும் காணப்படினும் வயது முன்னேற்றம் அடையஅடைய இவர்களின் எலும்புகள் படிப்படியாகச் சதைக்குள் மறைந்து இவர்கள் பலமும் நல்ல ஆரோக்கியமான உடல் அமைப்பும், சதைப்பற்றுள்ள சமமான அழகிய சரீரமும், நிரந்தர உயரமுமுடையவர்களாக மிளிர்வார்கள். இவர்களின் லக்கினத்திற்குக் குரு சம்பந்தம் ஏற்படின், தடிப்பான உதடுகளும் பருத்த சரீரமும் அனேகமாக அமையும். சிவந்த பழுப்பு நிறமோ அன்றேல் கறுப்பு நிறமோ உடைய மகரத்தோர் நீண்ட உருண்டையான முகமும் மேன்மையான விழிகளும், தோற்றமான புருவங்களும், கனிந்த பார்வையும், உயர்ந்த நெற்றியும் சற்று நீண்ட நேரான மூக்கும், நன்ருக அமையப்பெற்ற அழகிய வாயும், இனிய பேச்சும், வாலிபப் பருவத்தினரது தோற்றமும், எவரையும் வசீகரிக்கக் கூடிய முகராசியும், மனோகரமாகவும் கம்பீரமாகவும் காணப்படும் நடமாட்டமும் ஒருங்கே அமையப்பெற்ற சுந்தராங்கர்கள் ஆவர். இவர்களுக்கு முகம், மணிக்கட்டு, கை, வயிறு, தொடை, மறைவிடம் ஆகிய இவற்றில் எங்கேயாவது மறுவோ மச்சமோ காணப்படும். சிலர் நுண்ணிய இடுப்பும் மிருதுவான முழங்கால்களும் பெற்றிருப்பார்கள். சிலர் உள்ளங்கால் உயர்ச்சியுடையவராகவும் விகாரமான அல்லது பராக்கான நடையுடையவர்களாகவும் காணப்படலாம்.

மகரத்தோரில் லக்னதிபதியான சனீஸ்வரன் கொடிய பாபர்களின் சம்பந்தம்பெற்று மிகப்பல வீனராகக் காணப்படின் இவர்களுக்குக் கூன் முதுகு ஏற்படுமென்றும், அதன் தன்மை சனீஸ்வரனின் பலவீனத்திற்கு ஏற்றவண்ணம் அமையுமென்றும் கூறற்பாலதாம். இதனுலன்றோ ஒருசில மகரலக்கினத்தோர் கூன் முதுகுடன் ஜனிப்பதும் சிலர் நடுத்தர வயதிலோ அன்றேல் வயோதிபத்திலோ ஓரளவு கூனுவதும் கண்கூடு. மகரலக்கினத்தோரின் 2-ம் வீட்டிற்கு பாபர்களின் சம்பந்தம் ஏற்படுமாயின், அவர்களின் பற்கள் நீட்சியாகவோ அன்றேல் விகாரமாகவோ அமையுமென்றும், பல் எயிறுகள் [Gums] புஸ்டி அற்றனவாகவும் அடிக்கடி வருத்தமூட்டுவனவாகவும் அமையுமென்றும், அவர்களின் பேச்சு பொதுவாகக் குறைபாடுள்ள மழலைப் பேச்சாகவோ அன்றேல் தெற்றித் தெற்றி பேசும் தன்மையுள்ளனவாகவோ காணப்படுமென்றும் பகரப்படுகிறது. மகரத்தோர்களுக்கு அனேகமாகக் கரகரப்பும் கருமையுமுடைய தலைமயிரே காணப்படும். ஒரு சில ஆண்களுக்குத் தலையில் வழுக்கை அல்லது கோரை மயிரும், மார்பில் அடர்த்தியான ரோமக் கட்டும் அமைவதும் உண்டு. மகரலக்கினத்தில் ஜனனமான பெண்களுக்கு தேகபுஷ்டி, மனசு, ஆகியவற்றிற்குக் காரகனை அமிர்தா என்னும் சந்திரன் பெண் ராசிகளான இடப, கடக, கன்னி மகர, மீன ராசிகளில் பாபர் சம்பந்தமின்றிப் பலமாக அமையச் சுந்தராங்கர் என்னும் சுக்கிரன் வலுவாக இஷ்டஸ்தானங்களை மேவினுல், நல்ல நீண்ட கருமையான கூந்தலும், சரியான அளவில் அழகாக அமையப்பெற்ற மேல் கூறிய அங்கலட்சணங்களும் காணப்படுமென்றும், அவர்கள் வறியவர்களானுலும், பிறரின் கவனத்தைக்

கவரக் கூடியவராகத் தமது மனோகரமான உடல் என்னும் கூண்டை நல்லவண்ணம் பேணி அலங் கரித்து என்றும் இயற்கையாகவே இளம்பருவ மணமகள்போல் சோபிப்பரென்றும் அன்புள்ள மும், அடக்கமும், இனிய பேச்சும், நல்லமனமும் மாமலராள் நோக்கும், அதிக சுறுசுறுப்பும் அவர் பால் பிரதிபலிக்கும் என்றும் அறிக.

மகரலக்கினகாரர்கள் சந்தர்ப்பம் சூழ் நிலை ஆகியவற்றிற்கு ஏற்ப நடந்துகொள்ளக் கூடிய புத்திநுட்பமும், அபார மனோசக்தியும், மனவுறு தியும், தீர்ந்த அபிப்பிராயமும், முன்னெச்சரிக் கையும், உள்ளுணர்வும், விவேகமும், துரிதமான சுறுசுறுப்பும், அதிக சலசலப்பின்றிச் சிறு கூச்சத் தோடு கூடிய அமைதியும் இயற்கையாகக் கை வரப்பெற்ற மேதைகள். இவர்களின் எண்ணங் களிலும் பேச்சிலும், செயல்களிலும், அன்பு, அடக்கம், அனுதாபம், உயர்ந்த குறிக்கோளை அடைவதுபற்றிய ஆசை, விசாலமான மனப் பான்மை, பிறருக்கு உதவும் போக்கு, பெரிய மனிதத்தன்மை ஆகிய சீரிய குணங்கள் பெரும் பாலும் பொலிந்திருக்கும். பழைய பழக்க வழக் கங்கள், தத்துவங்கள் ஆகியவற்றில் ஆதாரமுள் ளனவாகவும், சிறந்தனவாகவும் தாம் கருது வனவற்றைப் பேணிப் பாதுகாக்கும் இயல்பினர்கள். போதனையிலும் பார்க்க சாதனையே மேலானதென்ற கொள்கையை அனுஷ்டிப்பவர்கள். உலக அனுபவம் வாய்ந்த வர்கள். அனுபவ ரீதியில் பெறாத வீண் வாய்ப் பேச்சுக்கள், ஆகம அறிவுகள், கற்பனைக் கோட் பாடுகள் ஆகியவற்றிலும் பார்க்க உலகியலோடு ஒட்டிய அனுபவ அறிவே சாலச் சிறந்ததென்று அவற்றையே பெரிதும் அனுஷ்டிப்பவர்கள். தாழ்ந்த குரலில் அன்புடன் இனிமையாகப் பேசும் பண்பினர்கள். சிலர் கேளிக்கையாகவும் ஹாஸ்யமாகவும் பேசுவர். சிலர் சகஜபுத்தியும் நகைச்சுவையாகச் சொற்பொழிவாற்றும் திற னும் வாய்க்கப்பெற்றவர். சிலர் இலக்கியங்கள், கலைகள், பல்வேறு துறைகளில் வாழ்க்கைக்கு வழி காட்டிப் பணியாற்றிய புகழேந்திகளான மேதை களின் வரலாற்றுக் கருத்தோவியங்கள் ஆகியவற் றைப் படிப்பதில் அதிக அக்கறை கொள்வர். சிலர் விஞ்ஞானம், நானாவித சாஸ்திரங்கள், தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கற்றுத்தேறி ஆராய்ச்சியாளராகவும் கலாநிதிகளாகவும், விரி வுரையாளர்களாகவும், பொறியியலாளர்களாக ளாகவும், இயந்திரசாலைகள், தொழிற்சாலைகள், அரசாங்க இலாகாக்கள் ஆகியவற்றில் அதிகாரி களாகவும், தொழிலாளிகளாகவும், கண்டக்டர் களாகவும், அரசியல், சினிமாத்துறை போன்ற கலைகளில் வல்லுனர்களாகவும் விளங்குவார்கள். ஒருசிலர் ஜனாதிபதிகளாகவும், மந்திரிகளாகவும் மிளிர்வர்.

மகரலக்கினகாரர்கள் ஆழ்ந்த ஆலோசனை யின்றி மூர்க்கமாக அவசரப்பட்டு எக்காரியத்தி லும் துணிந்து இறங்கமாட்டார்கள். சில சமயங் களில் ஆத்திரத்தைக் கிளப்பும் விஷயங்கள் ஏற் படும்பொழுது மட்டுமே எளிதில் கோபமடை கின்ற சிடுசிடுப்பான நிலை ஏற்பட்டு விரைவில் மறையும். விடாமுயற்சியுள்ள இவர்கள் கடின மாக வேலைவாங்குபவர்களாகவோ அன்றேல் கடின உழைப்பாளிகளாகவோ பெரும்பாலும் செயல்படுவர். தங்கள் ஆற்றலின் வரம்பை நன் குணர்ந்து செயல்படும் இவர்கள் மனமுவந்து தமது கடமைகளை அக்கறையுடன் பொறுப்பேற் றுக் கொள்வார்கள். எதையும் அளவிட முடியாத சகிப்புத் தன்மையுடன் கஷ்டப்பட்டு பிரயத்த னஞ்செய்யும் திறமைசாலிகளான இவர்கள், தங் கள் வேலைத் திட்டங்களைச் செவ்வனே ஒழுங்கு படுத்தி, மிகச்சிறிய அம்சங்களையும் கூட ஜாக்கி ரதையாகக் கவனித்துப் பரபரப்பின்றி நிதான மாகச் செயல்படுத்தக்கூடிய வெற்றிவீரர். உலக வாழ்விற்கு இன்றியமையாத போகப் பொருள் களைப் பெற்றுக் கணிசமான இன்பசுகத்தைப் பெரிதும் அனுபவிப்பதையே தங்கள் இலட்சிய மாகக் கொண்டு அல்லும் பகலும் அலுப்பு சலிப்பு இன்றித் தம் தொழிலில் ஈடுபாடு கொள் ளும் இவர்கள், வெளிப்புறத் தங்குதடைகள், சச் சரவுகள் ஆகியன ஏற்படின் தம் நியமமான முறைகளிலும் கொள்கைகளிலும் நின்று விலகிச் செல்லாதும், அதிருப்தி காட்டிப் புலம்பாதும், தம் சுக துக்கங்களை அதிகம் பொருட்படுத்தாதும் மனவுறுதியுடன் பிரபஞ்ச வாழ்விலிருந்தும் தற் காலிகமாக ஒதுங்கி வாழக்கூடிய ஞானிகள். இவர் கள் பொதுவாக அதிக பிடிவாதமும் ஜயிக்கமுடி யாத மனவைராக்கியமும் உடையவர்கள். முக்கிய விஷயங்களில் முக விறைப்பாக இருப்பார்கள். சில சமயங்களில் தம் பிடிவாத குணத்தால், வல் லுனர்களினதும் நல்லோர்களினதும் நிதானமான புத்திமதிகளைச் சிரத்தையுடன் ஏற்றுத் தக்கவாறு

ஒத்துணர்வோடு இயங்கும் இயல்பில்லாது அவற்றை அலட்சியம் செய்வதால், இவர்கள் அனேகமாக தங்களுக்கு ஏற்படக்கூடிய நல்ல வாய்ப்புகளை இழந்து விடுவதும் உண்டு. மகரத்தோருக்கு இயற்கைச் சுபர்களான புதனும் சுக்கிரனும் 9-ம், 10-ம் அதிபதிகளாக வருவதாலும் அவர்கள் இருவரும் அனேகமாக ஒன்றுசேர்ந்து மிளிர்வதாலும் மனோரம்மியமான நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறும் அதிருஷ்டம் அனேகமாக அமையும். இராஜயோகமும் சித்திக்கும்.

மகரலக்கினகாரர்கள் பொதுவாகப் பெற்றோருடன் அன்புடன் ஒட்டி வாழமாட்டார்கள். இவர்களில் ஒருவர் அகாலமரணம் அடையவும் கூடும். இவர்கள் தந்தையிலும் பார்க்கத் தாயாருடன் அதிவிசுவாசமும் பாசமும் உடையவர்களாக இருப்பார்கள். இவர்களின் அன்னை கௌரவிக்கப்படக்கூடிய நல்ல பெண்மணி. அன்னைக்குக் கண்நோய், நெஞ்சுவலி ஆகியன சிலசமயங்களில் ஏற்படலாம். இவர்கள் 30 வயதுக்குள் தம் சுயமுயற்சியால் முன்னுக்கு வந்து தம் தகப்பனுரை விட அதிக வசதியை அனுபவிப்பார்கள், தம் உடன் பிறந்தோர்களுடன் கருத்துவேறுபாடுடையவர்களாகவோ அன்றேல் பகைமையுடையவர்களாகவோ காணப்படுவார்கள். இந்த லக்கினத்தில் ஜனித்தவர்கள் ஒருவித தனிப்போக்கு உடையவர்கள். இவர்கள் மற்றவர்களுக்கு கீழ்படிந்து நடப்பது அபூர்வம். இவர்கள் பொதுவாக சனக்கூட்டத்தைத், தேர்ந்தெடுத்த ஒரு சிலருடன் மட்டுமே சேர்ந்துபழகுவார்கள். சாவதானமாகிவே சிநேகம் கொள்வர். தமது பிடிவாதக் கொள்கை வைராக்கியப்போக்கு, பழிவாங்கும் தன்மை ஆகியவற்றல் சில சமயங்களில் தம் நண்பர்களையும் பகைக்க நேரும். சமூக சேவைகளில் ஓரளவு ஈடுபாடு கொள்வதன் மூலம் தம்மை நன்கு பலப்படுத்திக்கொள்ள முடியுமென்பதைத் தெளிவாக உணர்ந்து செயல்படுவர். இவர்கள் சிற்றின்பவாழ்விலும் பணம் சேகரிப்பதிலும் அதிக பற்றுள்ளவர்கள். இவர்களுக்கு கம்பீரகுணமும் சந்தோஷமும், அதிருஷ்டமும், விவேகமும் ஒருங்கே அமையப்பெற்ற மனைவியோ / கணவனோ அனேகமாக வாய்க்கப்பெறும். இவர்கள் இன்பகரமாகவும் இணக்கமாகவும் தம் தாம்பத்திய வாழ்வைப் பெரும்பாலும் நடத்தக் கூடியவர்கள். சிலருக்குக் காந்தர்வ விவாகம் ஏற்படும். சிலருக்குக் கலப்புத் திருமணமும், சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணமும் நேரிடலாம், சனி, ராகு, கேது ஆகியோருடன் களத்திரத் தானதிபதியான சந்திரன் ஒன்று சேர்ந்தால், மனைவிக்குச் சூதக, கர்ப்பகாலங்களில் நோய்களோ வேதனைகளோ ஏற்படும் சதிபதிகளுக்கிடையில் விசாலமான வேற்றுமைகளும் உண்டாகும். பொதுவாக இவர்களுக்கு மத்திம சந்தான விருத்தியே ஏற்படும். இவர்களின் மக்கள் அறிவறிந்த திறமைசாலிகளாகவும், தேனீபோன்று சுறுசுறுப்பாகவும், டாம்பத்தைப் பெரிதும் விரும்புபவர்களாகவும் அனேகமாகக் காணப்படலாம். இவர்கள் தங்கள் மனைவி மீதும், பிள்ளைகள் மீதும் அலாதி பிரியம் வைத்துக் குடும்பத்தைப்பற்றிய சிந்தனையோடு செயல்படுவர்.

பொதுவாக மகரலக்கின காரர்களுக்கு மேலான சுகபோக சௌக்கியங்கள் நிறைந்த உலக வாழ்வே சித்திக்கும், இவர்களில் பலர் பதவி, அந்தஸ்து, அதிகாரம், ஆஸ்தி, இல்லம், பூமி, வாகனம், சுபபோகம், பிரயாணம், பிறதேசவாசம் போன்றவற்றைத் தமது சுயமுயற்சியின் மூலம் பெற்றுப் பிறர் பொறாமைப்படும் அளவு புகழோடு வாழ்வார்கள். மகரலக்கின காரர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தவகையில் தம் தாய் நாட்டை விட்டு வெளியேறிப் பிற நாடுகளில் வாசம் செய்பவர்கள் நல்ல அந்தஸ்தோடும் கொழிக்கும் ஆஸ்தியோடும், சகல சுகபோக்கிகளோடும் மிகச் சொகுசாகவும் சீரும் சிறப்புமாகவும் வாழ்ந்து வருகிறார்கள் என்பது தெளிவாகிறது. மகரத்தோருக்குப் பிரயாணக் காரகக் கிரகமான வியாழபகவான் பிரயாணத்திற்கு உரிய 3ம், 12-ம் வீடுகளுக்கு அதிபதியாக வருவதாலும்; 1ம்; 4ம், 7ம், 10ம் வீடுகள் பிரயாணத்தை ஏற்படுத்தும் சரராசிகளாக அமைவதாலும் இவ் வீடுகளின் அதிபதிகளும் பிரயாணக் காரகக் கிரகங்களாவதாலும், மகரத்தோர் நிலையாக ஓர் இடத்தில் அமர்ந்து வேலை செய்வதை விரும்பாது பெரும்பாலும் நகர்ந்து தொழில் புரிவதையோ, அயலூர் செல்வதையோ, பிறதேச வாசத்தையோ பெரிதும் விரும்புவார்கள். மேற்கூறிய ஸ்தானங்களில் பிரயாணக் காரகக்கிரகங்கள் இருந்து அவர்களின் தெசை காலம் ஏற்பட்டால் கண்டிதமாகப் பிறநாட்டுப் பிரயாணம் சித்திக்கும். இவர்களுக்கு 5ம், 10ம், 9ம், 2ம் வீடுகள் சுபசம்பந்தம் பெறுவதாலும், அவர்கள் பரஸ்பர மித்திரர்களாக மிளிர்வதாலும், மிக அபரிமிதமான செல்வநிலை வாய்க்கப்பெறும். சிலர் தமது

பொருளாதாரத்தைத் திட்டமிட்டுக் கட்டுப் படுத்திச் சிக்கனமாக நிர்வகிக்க இயலாதவர் களாகவும் காணப்படலாம். சிலர் விரோதம், வழக்கு, வியாதி, ஆகிய இவைகளில் ஏதாவது ஒன்றுக்காக அதிகபணம் விரயம் செய்வர். கடவுள் நம்பிக்கை உடையவர்களாயினும் சிலர் தாம் தீவிரபக்தர்களென வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். தான தர்ம தயாள குணம் உள்ள இவர்களில் சிலர் மதகுருமார் களிடத்தும், ஆதரவற்றவர்களிடத்தும், தர்மஸ் தாபனங்களிடத்தும் அதிக அக்கறை கொண்டு அவற்றின் மேம்பாட்டிற்காகப் பெரிதும் உதவிப் பாடுபடுவார்கள். இவர்களில் பெரும்பாலான சைவர்கள் விநாயகர், மகாவிஷ்ணு, இலட்சுமி ஆகிய தெய்வங்களைப் பூஜித்து தம் இஷ்டசித்திகளைப் பெறுவர்.

மகரலக்கின காரர்களுக்குப் பால்யப் பருவத்திலிருந்து 27 வயது வரை காது, கழுத்து, பற்கள், முழங்கால் ஆகியவற்றில் பீடைகளும், விஷம், ஜுரம், சீதளம் முதலிய நோய்களும் ஏற்பட்டுப் பின் குணமடையும். இவர்களுக்குப் பிற்காலத்தில் கால், கை, முழங்கால், இருதயம் ஆகியவற்றில் வாதரோகம், பாரிசம், சீதளம், வயிற்றில்வலி, சூலை தோல்வியாதிகள், நீர் சம்பந்தப்பட்ட சிறிது சிறிதாக உடலை உருக்கும் நோய்கள் ஆகியவற்றில் ஏதாவதொன்றால் பீடை ஏற்படுமென்றும் ஒரு சிலருக்குச் சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் அமையக் கூடுமென்றும் கூறற் பாலதாம். லக்கினம் வலுப்பெற்றிருப்பின் இவர்களுக்கு அனேகமாக 78 வயது வரை ஆயுள் உண்டு. பூரணாயுள் யோகம் ஜாதகத்தில் காணப்பட்டால் ஆயுள் நீடிக்கும். பல சோதனைகளால் கஷ்டப்பட்டுக் கவலைப்படுபவர் கள் பரிசுத்தமான நீலக்கல் மோதிரம் அணிந்தும், சனிவாரங்களில் சனீஸ்வர பகவானை நினைத்து வழிபட்டு உபவாசம் இருந்தும், சனி பகவானுக்கு மாதம் ஒரு முறை ஆகுதல் எள் எண்ணெய், நீல வஸ்திரம் ஆகியன சாத்தி எள் அன்னம் நைவேத்தியம் வைத்து சகஸ்ர நாம அரிச்சனை செய்வித்தும் வந்தால் மலை போல் வரும் சகல துன்பங்களும் ஆதித்தனைக் கண்ட பனிபோல் மறைந்து அனுகூலமான பலன்கள் பெருகும். பொதுவாக மகரலக்கினத்தில் ஜெனிப்பது மிகவும் விரும்பத்தக்கது. இவர்களின் ஜாதகம் அதிருஷ்டத்துடன் அமைந்தாலும் சரி அன்றேல் பலவீனமாகக் காணப் பட்டாலும் சரி இவர்களின் ஜனன காலநிலமையிலும் பார்க்க அந்தியகாலநிலை பெரும்பாலும் சிறந்ததாகவே அமையும். இவர்கள் பெரும் செல்வந்தர்களாகவோ அன்றேல் கொடிய வறியவர்களாகவோ காணப்பட்டாலும், இவ் இருசாராரும் தங்கள் வாழ்வின் அந்தியகாலத்தில் ஒரு வகை வெறுப்பை அடைந்து, சுப துக்கங் களாலோ, விருப்பு வெறுப்புகளாலோ பாதிக் கப்படாத ஞானிகளாக நின்று ஆத்மீக வாழ்வையே பெரிதும் நாடுவர்.

ஓம் ஸ்ரீ சனீஸ்வராய நம!

---

தமிழ் ஈழம்...........23-ம் பக்கத் தொடர்ச்சி

முன்பு நிலவிய இக்கோட்பாடு இன்று அழிந்து விட்டது. எனவேதான் அக்கட்சியிலிருந்து நாம் வெளியேறுகிறோம்.

எங்கள் சட்டபூர்வமான உரிமைகளுக்குப் போராடவேண்டிய கட்டத்தில் நாம் இன்று இருக்கிறோம். எமது கோரிக்கையை எவ்வாறு எப்பொழுது நிலைநாட்டப் போகிறோம். உணர்த் தப்போகிறோம் என்பது எமக்குத் தெரியாது. இன்றைய காலகட்டத்தில் தமிழர்களாகிய நாம் எல்லோரும் ஒன்றுபட்டு அடுத்து நாம் செய்ய வேண்டியவை பற்றி ஆலோசிக்கக் கடமைப் பட்டுள்ளோம். இதனால் நான் அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறுகிறேன்.

இச்சமயத்தில் இச்சபையிலுள்ள தமிழ் உறுப்பினர்களும், வெளியே உள்ள தமிழர்களுக் கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நான் தீவிரவாதத்துடன் பேசுபவன் அல்லன். ஆனால், எமது விருப்பத்துக்கு மாறாக எம்மீது வேறோர் மொழி திணிக்கக்கூடுமானால், அதை நாம் எதிர்ப்போம்; எதிர்த்தே தீருவோம்; எதிர்த்துக் கொண்டே இருப்போம். தார்மீக வழியில் எமது எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத் துவோம். திட்டவட்டமான இலட்சியத்துடன் ஆக்கபூர்வமான போராட்டத்தைத் தமிழர்கள் நடத்தி அதை அடைந்தே தீருவார்கள். (வளரும்)

---

உங்கள் இல்லத்தின் பொக்கிஷம்
**திருக்கணித பஞ்சாங்கம்**

சோதிட ஆராய்ச்சி

# தமிழ் ஈழம் மலருமா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வே. சின்னத்துரை நல்லூர்

1947-ம் ஆண்டுத் தேர்தலில் நான் படு தோல்வியடைந்ததற்கு ஐ-தே-கட்சியில் போட்டியிட்டேன் என்பது ஒன்றே காரணம். பலஇனம் பல மொழிகள், பல கலாசாரங்களைக் கொண்ட இத்தீவில் எல்லோருக்கும் சமத்துவம் என்ற அடிப்படைக் கொள்கையைக் கொண்டதாகவே இக்கட்சி அமைக்கப்பட்டது. ஆனால் இக்கொள்கைக் கோட்பாட்டிலிருந்து இக்கட்சி விலகிச் செல்லும் அறிகுறிகள் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துவிட்டன.

விரைவில் நடைபெறவிருக்கும் ஐ-தே-கட்சியின் வருடாந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் சிங்களத்தை மட்டுமே இந்நாட்டின் உத்தியோக மொழியாக்கும் தீர்மானம் இடம்பெற்றுள்ளது. இவ்வளவு காலமும் இக்கட்சியானது நாடுமுழுவதும் சிங்களமும் தமிழுமே ஆட்சிமொழிகள் எனும் கொள்கையுடன் இயங்கியது. இக்கொள்கை பல தடவைகளில் உறுதிப்படுத்தவும் பட்டது. இக் கொள்கையை இச்சபையிலும், வெளியிலும் பிரதமரே உறுதியாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆனால் இதற்கு மாறுபட்ட வேறு ஒரு கொள்கையை ஐ-தே-கட்சியின் வருடாந்த மாநாட்டுக்கு இன்று வரும்போது, இத் தீர்மானத்தின் விளைவு குறித்து தமிழ் பேசும் பிரதிநிதிகளான நாம் ஆழமாகச் சிந்திக்கிறோம்.

ஐ-தே-கட்சியைச் சேர்ந்த தமிழ்ப் பேசும் உறுப்பினராகிய நாங்கள், இந்நெருக்கடியிலிருந்து எம்மைப் பாதுகாக்க, அதே வருடாந்த மாநாட்டில் ஓர் மாற்றுத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர எமக்கு அனுமதி தருமாறு அக்கட்சியின் செயற்குழுவிடம் கேட்டோம். எமது கோரிக்கைக்கு செவிமடுக்க ஐ-தே-கட்சி செயற்குழு தயாராக இல்லை. நாம் அரசாங்கக் கட்சியை விட்டு வெளியேறி எதிர்க்கட்சிக்குவர இதுவும் ஒரு காரணம்.

இந்நாட்டில் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்கு இம்மொழிப் பிரச்சினை பாரதூரமான விளைவை ஏற்படுத்தக்கூடியதென்று நாம் கருதுகிறோம். சிங்களத்தை மட்டுமே நாட்டின் ஒரே உத்தியோக மொழியாக்க வேண்டும் என்ற கடுமையான கிளர்ச்சி சிங்களப் பகுதிகளில் அண்மைக்காலத்தில் தலைதூக்கியிருப்பது எமக்குத் தெரியும்.

இச்சமயத்தில் இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்களின் உரிமைக்காகப் போராட எழுந்துநிற்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். சிங்களம் மட்டும் பிரசாரகர்களால் தமிழுக்கு தரப்போவதாகக் கூறப்படும் அந்தஸ்தைவிட எமது தமிழ் மொழி உயர்ந்த அந்தஸ்தை உடையது என்று நாம் கருதுகிறோம். இந்நாட்டின் நிர்வாகத்திலும், கலாசாரத்திலும் அதிமுக்கிய இடம் வகித்த மொழி தமிழ்மொழி.

கடந்த தலைமுறையையும் இந்தத் தலைமுறையையும் சேர்ந்த எமது தலைவர்கள் இலங்கையின் சுதந்திரத்திற்காகப் போராடியபோது, நாமெல்லாம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறப் போவதாகவே எண்ணினோம். ஆங்கில ஆதிக்கத்திலிருந்து மீட்சிபெறுவதாக நினைத்தோம். எமது மொழியும் இனமும் எக்காலத்தில் சுதந்திரம் பெறும் என்று எதிர்பார்த்தோம்.

அந்நிய ஆட்சி மாறியவுடன் ஆங்கிலத்துக்குப் பதிலாக இன்னோர் மொழி நம்மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று தமிழர்கள் பேரம் பேசியதில்லை. நாட்டில் நடைபெறும் கிளர்ச்சிகளைப் பார்க்கும்போது, தமிழுக்கு இந்நாட்டு அரசியலில் எதிர்காலத்தில் இடம் கிடையாது என்பது புலனாகிறது. எந்த ஒரு சுயமரியாதையுள்ள தமிழனும், தொன்மைப் பெருமைகொண்டதுமான தனது தாய் மொழி கீழான அடிமை நிலைக்குத் தாழ்த்தப்படுவதைச் சகித்துக்கொள்ள மாட்டான்.

ஜனநாயகம் என்பதன் பொருள் பெரும்பான்மையினத்தின் கொடுங்கோன்மையல்ல; சிறுபான்மையினருக்கு நீதியும், சமத்துவமும் வழங்குவதுதான் ஜனநாயகம். ஐ — தே — கட்சியில்

(22-ம் பக்கம் பார்க்க)

## உங்கள் மச்சங்கள்

# அதிஷ்டமானவையா?

"அன்பு நெஞ்சன்" கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்

### முழங்கால்களின் மச்சம்

ஆண்களுக்கு, இடது முழங்காலில் மச்சம் அமையப் பெற்றிருப்பது அதிஷ்டமான ஒன்றல்ல. வலது முழங்கால் மச்சம் கொண்டவர்கள் அனுபவிக்கும் நற்பலன்களை இவர்களினால் அனுபவிக்க முடியாது. மேலும், ஒழுங்கீனர்களாகக் காணப்படும் இவர்கள்; குடும்பத்தில் மனைவி பிள்ளைகளை துன்புறுத்தும் சுபாவமிக்கவராகவும் காணப்படுகிறார்கள்.

ஆனால்; இடது முழங்காலில் மச்சக்குறி கொண்ட பெண்களுக்கு நற்பலன்களைக் கூறலாம். சுருங்கச் சொல்வதானால் பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீடுவரை இவர்கள் 'சுகபோக வாழ்வை' தொடர்ச்சியாக அனுபவிப்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

வலது முழங்காலில் மச்சம் கொண்ட பெண்கள் உதட்டுக்கும் உள்ளத்துக்கும் எவ்வித தொடர்புமில்லாத 'இரட்டை வாழ்க்கை' நடத்துவர். மிகுந்த சுயநலவாதிகளாகிய இவ்வகைப் பெண்கள் தாம் நினைத்ததை மற்றவரிடமிருந்து பெறுவதற்காக வெகு தந்திரமாக அவர்களுடன் பழகுவர். இவர்களுடன் பழகுபவர்கள் மிகஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏனெனில்; சுயநலத்துக்காக — சொந்த விருப்புக்காக தம்முடன் பழகும் எவரையும் காலை வாரிவிடத் தயங்காதவர்கள் இவர்கள். (தமது கணவனுடன் மட்டும் இவர்கள் 'இரட்டைவேடம்' போடாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பெண்கள் செய்கின்ற எந்த ஒரு முயற்சியும் குடும்ப நலனை மேம்படுத்துவதாகவே அமையும்.)

வலது முழங்காலில் மச்சம் பெற்ற ஆண்கள் மனைவி மூலமாக பெரும் சுகத்தையும் சொத்துக்களையும் அனுபவிப்பர். இவர்களுக்கு திருமணமாகும்போதே மனைவி வழியால் சீர்வரிசைமூலம் பெரும் பணம் மற்றும் சொத்து சுகங்கள் வந்து சேரலாம். இல்லையேல் மனைவி வீடுவந்து சேர்ந்தவுடன் அந்த மகாலட்சுமியே வந்து சேர்ந்தது போல் வாழ்க்கை பல நிலைகளில் பிரகாசமடையும். இச்சந்தர்ப்பத்தில் இவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு, வியாபாரத்தில் திடீர் செழிப்புநிலைகள் போன்ற பொருளாதார அடிப்படை உயர்வுகளுக்கு வாய்ப்புண்டு. (சில வேளைகளில் மனைவியே பதவியில் இருந்தால் அதனாலும் கூடிய வருமானத்தை பெறும் சாத்தியம் ஏற்படலாம்.)

மற்றவர்களுடன் பண்பாக விட்டுக்கொடுத்துப்பழகும் இவர்களுக்கு நண்பர்களும் சற்று அதிகமாகவே வந்து வாய்க்கிறார்கள். நல்லவர்களாகவும், ஆபத்து நேரங்களில் அன்புடன் உதவுபவர்களாகவும் இந் நண்பர்கள் வாய்க்கப்பெறுவது இவர்கள் பெற்ற நற்பலனென்றே கூற வேண்டும்.

இவர்களுக்கு அனேகமாக 'சரும' நோய்களே ஏற்படுகின்றன. எனினும் நாற்பது வயதிற்குப் பின் இந்நோயின் தாக்கம் படிப்படியாகக் குறைவடைந்து முற்றாக மறைந்துவிடலாம்.

(முற்றும்)

### மாலையின் மாண்பு

ஸ்படிகமணி ஜபமாலை சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தும். ருத்திராக்ஷமாலை எல்லாவிருப்பங்களையும், பவழமாலை எல்லா உலக வசியத்தையும், நெல்லிக்கனிமாலை மோக்ஷத்தையும், தங்கமணி மாலை பெருஞ்செல்வத்தையும், முத்துமாலை எல்லாவித்தையையும் சிந்திக்கவும் செய்யவும் கொடுக்கவும் கூடியன. நவரத்தினமாலை பகைவர்க்குப்பயத்தை உண்டாக்கும்.

ஆதாரம் – ரா.கி.விஜயம்.

# வியாழ மாற்றம்

()

# எப்படி?

மறைமிகு கலைநூல் வல்லோன்
வானவர்க் கரசன் மந்திரி
நறை சொரி கற்பகப் பொன்
நாட்டினுக் கதிபனுகி
நிறை தனஞ் சிவிகை மன்னில்
நிடு போகத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன்
இரு மலர்ப் பாதம் போற்றி.

நிகழும் துந்துபி ஸ்ரீ கார்த்திகை மீ 10உ (26-11-82) வியாழக்கிழமை பின்னிரவு நாழிகை 59-26 மணி 5-57க்கு வியாழபகவான் துலாராசியை விட்டு விருச்சிகராசிக்குப் பிரவேசிக்கின்ருர். 1982-11-26 தொடக்கம் 1983-12-22 வரையிலான ஒருவருட காலத்தில் குருபகவானின் விருச்சிக ராசிச் சஞ்சாரத்தால் நமக்குத் துன்பங்களைக் களைந்து, தெய்வானுகூலம், மங்கலகாரியங்கள், பொன், பொருள் சேர்க்கை, நல்வாழ்வு, தார புத்திர சுகம் முதலிய நற்பலன்களைத்தந்து எமது வாழ்க்கை வளம்பெற வியாழபகவானைப் பிரார்த் திப்போமாக.

## உலக பலாபலன்

விருச்சிகராசியில் வியாழன் சஞ்சரிக்குங் காலங்களில் பொதுவாக வல்லரசு நாடுகளில் அமைதியின்மை காணும். பரஸ்பர விரோதங்கள் தோன்றும். ஆயுதஞ் சேகரித்தல், ஆயுதபலத் தைப் பிரயோகித்தல் முதலியன ஏற்பட இட முண்டு. பல நாடுகளில் உள்நாட்டுக் கிளர்ச்சி களும் அடக்குமுறைகளும் நியாய விரோதமான மனிதாபிமானமற்ற செயல்களும் ஏற்படலாகும். எவ்வகையில் பார்த்தாலும் பலவகையில் அழிவு களே முன்நிற்கக் காணலாம். வளர்முக நாடு களில் ஆயுதப் படையினரால் சேதங்கள் ஏற்படும். இக்காலத்தில் அதிகாரத்திலிருப்போர் மிக்க அவதானமாக இருக்கவேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் எச்சமாதானத்தையும் செய்ய முடியாமல் தத்தளிக்கும். உலகில் செல்வாக்கு குன்றும். பிரித்தானிய நாடுகளில் அரசியல் முறை களில் மாற்றங்கள் ஏற்படலாகும். இந்திய அர சியல் நிலைமைகள் முன்னேற்றமடையும். பல கைத்தொழில்கள் விருத்திபெறும். முஸ்லிம் நாடு களில் முன்னேற்றம் தோன்றும்.

## இலங்கை

இலங்கையின் லக்கினமான கும்பத்திற்கு 10-ம் வீட்டில் வியாழன் யுரேனஸுடன் சஞ்ச ரிப்பதால் அரசியல் விவகாரங்களிலும், பாராளு மன்றம், மந்திரிசபை என்பவற்றிலும் மாற்றங்க ளேற்படும். அரசு அதிகாரத்தைச் செலுத்தும். அரசியல் தலைவர்கட்கு பரஸ்பர விரோதங்கள் தோன்றும். பணப்புழக்கம் அதிகமாக விருப்பினும், பணவீக்கமும் இருந்து கொண்டே இருக்கும். பணத்தின் மதிப்பு மேலும் குறைய லாம். தமிழர்களின் லக்கினமான மேடத்திற்கு அட்டமத்தில் வியாழன் சஞ்சரிப்பதால் தமிழர் கள் மேலும் பாதிப்படைவார்கள். தமிழர்களி டையே விரக்தி மனப்பான்மை மிகும். கொள்ளை, களவு முதலிய துர்ச்செயல்களும் அதிகரிக்கும். அமைதிக்குப் பங்கமேற்பட்டு பயத்துடன் வாழ வேண்டியநிலை தோன்றும். விருச்சிகத்தில் வியா ழன் சஞ்சரிக்குங்காலம் இலங்கைத் தமிழர்கட்குச் சோதனையானகாலமாகவே அமையும். வெள்ளப் பெருக்கு, மண்சரிவு முதலியவற்ருலும் அழிவுகள் உண்டாகும்.

குருதசை அல்லது குருபுத்தி நடைபெறும் ஜாதகர்களுக்கு இம்மாற்றம் கவனிக்கப்பட வேண்டியது. இவர்கள் ஜாதகத்தில் குரு இருக்கும் இடத்தை அவதானிக்கவேண்டும். அந்த ஸ்தானத்திலிருந்து 1,2,3,4,7,8,10,11-ம் இடங்களிலொன்ருக விருச்சிகராசி அமையப்பெறின் இவர்கள் பலன் விசேடமாகும். வாழ்க்கையில் செந்தழிப்பும், மன மகிழ்ச்சியும் உண்டாகும். 6, 12-ம் இடங்களில்வரின் நற்பலன் கிடைக்கமாட்டாது. 5, 9-ம் இடங்களில்வரின் சமபலனே உண்டாகும்.

தனிப்பட்டவர்களுக்கு சந்திரராசி ரீதியாக வியாழமாற்ற பலாபலன்களை ஆராய்வோம்.

## மேடம்

மேடராசியிற் பிறந்தவர்கட்கு குருபகவான் லோகமூர்த்தியாக 8-ம் வீட்டில் பவனிவருகிருர். இவர்கள் பலவகையிலும் கஷ்டபலனையே கூடுதலாகக் காண்பர். தொழிலில் விருத்தியின்மையும், அதிக பிரயாசையும் ஏற்படும். முயற்சிக்கேற்ற லாபம் கிடைக்காது. மிதமிஞ்சிய செலவுகள் கடன்தொல்லைகள் அதிகரிக்கும். வங்கி நிலை கவலையளிப்பதாகவே இருக்கும். தேகசுகமும், குடும்பசுகமும் பாதிக்கப்படும். முன்பு செய்த முதலீடுகளில் நஷ்டத்தையே கூடியபங்கு எதிர்நோக்கவேண்டி இருக்கும். வாகனம் வைத்திருப்போர் விபத்துக்கள்பற்றி அவதானமாக இருக்க வேண்டும். உத்தியோகத்துறையிலுள்ளோர் பல சிக்கலுக்குள் கருமமாற்றவேண்டியேற்படும். மாணவர்கட்கு பரீட்சை, போட்டி முதலியவற்றிற் சித்தியின்மையே காட்டுகின்றது.

## இடபம்

இவ்விராசியில் ஜனனமான ஜாதகர்கட்கு குருபகவான் சுவர்ணமூர்த்தியாக 7-ம் ராசியில் சஞ்சரிக்கிருர். மூர்த்திபலமும், ஸ்தானபலமும் இருப்பதால் இவர்களுக்கு பொருள்லாபம், காரியசித்தி புத்திக்கூர்மை, வாகனசுகம் போன்ற நற்பலன்கள் ஏற்பட இடமுண்டு. தேகசுகம், குடும்பசுகங்கள் என்பன சிறப்பாக அமையும். முன்பிருந்த கடன்தொல்லைகள் நீங்கி வருவாய் அதிகரிக்கும். புதிய முதலீடுகள் ஆரம்பிப்பதற்கு நன்று. உத்தியோகத் துறையிலிருப்பவர்கள், வியாபார, விவசாயத்துறையிலீடுபட்டோர் லாபமடைவர். பருவமடைந்தோர் மங்கலவாழ்வு பெறுவர். மாணவர்களுக்கு பரீட்சைகளில் சித்தி, பாராட்டு என்பன கிடைக்கும்.

## மிதுனம்

மிதுனராசியினர்க்கு சூரியன் தாம்ரமூர்த்தியாக 6-ம் வீட்டில் சஞ்சரிப்பதால் நினைத்த கருமங்கள் யாவும் தாமதமாகவே கைகூடும். பிரயாசை கூடுதலாகவிருப்பினும் அதற்கேற்றலாபம் கிடைப்பது கடினம். உத்தியோகத்துறையிலிருப்பவர்கட்கு குடும்பசுகம், தேகசுகம் பாதிப்படைய நேரிடும். புத்திரர்களால் கெட்ட பலன்களே காணப்படும். இரகசிய சத்துருக்களைப்பற்றி அவதானமாக இருக்கவும். கடன்தொல்லைகளும் தலைதூக்க நேரிடும். மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ற லாபம் கிடைப்பது கஷ்டம், எனினும், மனந்தளராது கூடிய ஊக்கம் செலுத்தவும்.

## கடகம்

கடகராசியில் ஜனித்தவர்களுக்கு வியாழன் ராஜதமூர்த்தியாக 5-ம் வீட்டில் பவனிவருவது மிகநன்று. சகல கருமங்களும் நினைத்தபடி அனுகூலமாகும். தொழில் துறையில் முன்னேற்றமும் செல்வாக்கும் கிட்டும். தொழிலற்றிருப்பவர்கட்கும் தொழில்வாய்ப்புகள் கிடைக்கலாகும். முன்பு கடன்தொல்லைகள் இருப்பின் அவை சுமுகமாகத் தீரும். புதிய தொழில்கள் ஆரம்பிக்கவும், முதலீடு செய்யவும் நன்று. புத்திரர்களால் ஜாதகத்தில் சுபஸ்தானத்திலிருப்பவர்கள் உன்னத நிலை அடைவர். இல்லத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நிகழும். உத்தியோகத்திலிருப்பவர்கள் மேலதிகாரிகளின் கௌரவமும், பாராட்டும் பெறுவர். மாணவர்கட்கு பரீட்சைகளில் சித்தியுண்டு. உயர் கல்வி வாய்ப்புகளும் தோன்றும்.

## சிங்கம்

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு வியாழன் லோகமூர்த்தியாக 4-ம் வீட்டிற் சஞ்சரிப்பது சிறப்பாயினும் மூர்த்திபலம் குன்றியிருப்பதால் ஜனன ஜாதகத்தில் குரு இருக்கும் தன்மைக்கேற்ப பலன்களில் மாறுபாடுகள் காணும். தொடங்கும் கருமங்கள் அதிக பிரயாசையின் பின்பே அனுகூலமாகும். எல்லாக்கருமங்களிலும் அலைச்சல் கூடுதலாகவிருக்கும். செலவினங்களும் கட்டுக்கடங்காமலிருக்கும், தேகசுகம் பாதிக்கப்படமாட்டாது. உத்தியோகத்திலும், பொறுப்பான பதவிகளிலும் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் இன்னும் அதிகமாக இருக்கும். பெரியவர்களாலும், நண்பர்களாலும் சக தொழிலாளராலும் உதவிகள் உண்டு. விவசாயத்துறையிலீடு

பட்டோர் நன்மையடைவர். மாணவர்கட்கு முயற்சிக்கேற்ற பலன் கிடைக்கும்.

## கன்னி

இவர்களுக்கு குருபகவான் தாம்ரமூர்த்தியாக 3-ம் வீட்டில் வலம் வருகிறார். இவர்களுக்கு வருவாயிலும் பார்க்கச் செலவுகள் அதிகமாக இருக்கும். தொடங்குங் கருமங்களில் பல சிக்கல்கள் உருவாகும். வங்கிநிலைகளும் திருப்தியளிக்கமாட்டாது. யாருக்காவது பணம் கடன்கொடுத்தால் மீளப்பெறுவது கஷ்டம். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படும். பலவகையிலும் சிரமங்களே கூடுதலாகத் தென்படுகிறது. புதியதொழில் ஆரம்பித்தல், முதலீடுசெய்தல் என்பவற்றைப் பின்போடுதல் நன்று. உத்தியோகத்துறையில் இருப்பவர்கட்கு வேலைக்கஷ்டங்களும், வசதியற்ற இடமாற்றங்களும் பல பிரச்சினைகளும் தோன்ற இடமுண்டு. விவசாயத் துறையிலீடுபட்டோர்க்கும் நற்பலன்கள் குறைந்தே காணப்படும். மாணவர்களுக்கும் கல்வியில் தடைகள், தாமதங்கள் தோன்றும். இவர்கள் வியாழக்கிழமை விரதமனுஷ்டித்து தக்ஷிணாமூர்த்தியை வழிபடுதல் நன்மையபயக்கும்.

## துலாம்

துலாராசியில் பிறந்தவர்கட்கு குரு சுவர்ணமூர்த்தியாக 2-ம் இராசியில் சஞ்சரிக்கிறார். இவர்களுக்கு குருபகவானின் பலன்கள் நன்மையாகவிருப்பினும் 7½ சனி நடுப்பகுதி நிகழ்வதால் அதிக நற்பலன்களை அனுபவிக்க முடியாது. தொழில் முறைகளில் சிறப்பும், முன்னேற்றமுமுண்டு. பொருள்வரவு, வங்கிநிலை என்பன முன்னரிலும் பார்க்க சிறப்படையும். வியாபாரம் முதலியவற்றில் முதலீடு செய்பவர்கள் எதிர்பார்த்ததிலும் பார்க்க குறைந்த லாபத்தையே பெறுவர். தேகநிலை, குடும்பநிலை சுமாராக இருக்கும். பருவமடைந்தோருக்கு விவாகப்பேச்சுக்கள் முதலியன நடைபெறினும் விவாகவிஷயத்தில் தாமதமுண்டாகும். உத்தியோகத்துறையிலிருப்பவர்கட்குப் பொறுப்புகள் அதிகமாகவே இருக்கும். பொதுவாக இவ்விராசிக்காரர் நற்பலன்களும், கஷ்டபலன்களும் கலந்தே அனுபவிப்பர். மாணவர்களுக்கு கல்வித்துறையில் நடுத்தர பலன்கள் காணப்படும்.

## விருச்சிகம்

இவ்விராசிக்காரருக்கு குருபகவான் ரஜதமூர்த்தியாக ஜன்ம ராசியில் சஞ்சரிக்கிறார். இவர்களுக்குத் தொடங்குங் கருமங்கள் அதிக அலைச்சல், பிரயாசையின்றி சுமுகமாக நிறைவேறும். செலவுக்கேற்ற வருவாய் கிட்டும். தொழில் துறையில் முன்னேற்றங்களும் லாபமும் கிடைக்க இடமுண்டு. ஸ்தானபலம் குன்றினும் மூர்த்திபலம் நன்றாயிருப்பதால் தேகசுகம் பாதிப்படைய இடமில்லை. கடன்தொல்லைகள் என்பன ஓரளவு நிம்மதியைத் தரும். புத்திரர்களாலும், இனத்தவர்கள், நண்பர்களாலும் நன்மையான பலன்கள் ஏற்படலாகும். பூமி முதலியவற்றால் லாபமுண்டு. மாணவர்களுக்கு கல்வித்துறையில் முன்னேற்றமும், சித்தியும் ஏற்படலாகும்.

## தனுசு

தனுராசிக்காரருக்கு குரு லோகமூர்த்தியாக 12-ம் இராசியில் பவனி வருகின்றார். இவர்களுக்கு தொடங்குங் கருமங்களில் பிரயாசை மிகக் கூடுதலாகவிருக்கும். நினைத்த கருமங்கள் எதிர்மாறான பலனையே கொடுக்கும். வரவிலும் பார்க்கச் செலவு மித மிஞ்சியிருக்கும். வங்கி நிலையைச் சமாளிப்பது மிகக்கஷ்டம். அன்னிய தேசத்தொடர்புகள் விருத்தியாகும். தேகசுகம், குடும்பசுகம் பாதிப்படையும். கடன் தொல்லைகளும் இடையிடையே தலைதூக்கிய வண்ணமிருக்கும். தேவையற்ற பிரச்சினைகள் தேடிவரும். பொதுவாக நிம்மதி குறைந்தே காணப்படும். தொழில் முறையில் முன்பு முதலீடு செய்தவற்றால் லாபம் காண்பது கடினம். இரகசிய பகைவர்களைப் பற்றியும் அவதானமாக இருக்கவும். உத்தியோகத்துறையிலிருப்பவர்கட்கு வசதி குறைந்த இடமாற்றங்கள் ஏற்படலாகும். விவாகம் முதலிய மங்கல கருமங்கள் தாமதமடையும். மாணவர்களுக்கு சித்திகள் குறைந்தே காணப்படும்.

## மகரம்

இவ்விராசியினர்க்கு வியாழ பகவான் தாம்ரமூர்த்தியாக 11-ம் இராசியில் பவனிவருகிறார். மூர்த்திபலம் குறைந்திருந்தாலும், ஸ்தானபலம் மிகவும் நன்று, தொழில் முயற்சியால் எதிர்பாராத லாபங்கள் வந்துசேரும். எண்ணிய கருமங்கள் மிக இலகுவில் இனிதாக அனுகூலமாகும். முன்பு முதலீடு செய்தவற்றால் அதிக லாபத்தைப் பெற வாய்ப்புண்டு, புதுத்தொழில்கள் ஆரம்பிக்கவும், முதலீடு செய்யவும் நன்று. தொழிலற்றிருப்பவர்கட்கும் தொழில் வாய்ப்புகள் ஏற்படலாகும். தேகசுகம் சிறப்பாக இருக்

கும். வீட்டில் மங்கல கருமங்கள் நிகழ இடமுண்டு. பருவமடைந்தவர்களுக்கு மங்கலவாழ்வு கிட்டும். உத்தியோகத்துறையிலிருப்பவர்க்கு வசதியான இடமாற்றமும், உயர்ச்சியும் கிடைக்கும். பொதுவாக மகிழ்ச்சி நிலவும். மாணவர்களுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக அமையும்.

### கும்பம்

கும்பராசியில் பிறந்தவர்கட்கு வியாழன் ரஜதமூர்த்தியாக 10-ம் வீட்டில் வலம்வருகின்றார். தொழில் சம்பந்தப்பட்ட விடயங்கள் மிகுந்த பிரயாசையின் பின்பே அனுகூலமாகும். எண்ணிய கருமங்கள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். தொழில்மூலம் இடப்பெயர்வு ஏற்படும். வரவிலும் பார்க்கச் செலவு மிதமிஞ்சியே காணப்படும். பணக்கஷ்டம் மனத்தை உறுத்திய வண்ணம் இருக்கும். தேகாரோக்கியம் சிறப்பாக இராது. உத்தியோகத்தர்களுக்கு வெறுப்புகள், பிரயாசைகள் கூடுதலாகவே இருக்கும். வியாபாரத்துறையிலீடுபட்டவர்கள் குற்றம் செலுத்தவேண்டி நேரிடலாம். கறுப்பு மார்க்கட் வியாபாரம் செய்வோர் மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும. கடன் முதலிய தொல்லைகளும் உண்டாகலாம். மாணவர்களுக்கு சமபலன்களே காணப்படும்.

### மீனம்

இவ்விராசியில் ஜனனமானவர்களுக்கு குரு பகவான் சுவர்ணமூர்த்தியாக 9-ம் ராசியில் சஞ்சரிக்கிறார். இவர்களுக்கு வியாழ சஞ்சாரத்தின் பலன் மிகச்சிறப்பாக இருப்பினும். அட்டமத்துச் சனி நடைபெறுவதால் மிதமிஞ்சிய நற்பலனை அனுபவிக்க முடியாது. தொழில்முறைகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படும். நல்ல பணவரவாய் இருப்பினும் அதிக செலவுகள், கடன் தொல்லைகளும் தொடரும். இனசனங்களுக்கிடையே பகைமைகளும் குடும்பச்சச்சரவுகளும் ஏற்பட இடமுண்டு. பிதா வழியால் நன்மையான பலன்கள் கிட்டும். தேகாரோக்கியம் அதிகம் பாதிக்காது. பருவமடைந்தவர்களுக்கு மங்கல வாழ்க்கை தாமதமாகும். உத்தியோகத்துறையிலிருப்பவர்கள் மேலதிகாரிகளினதும், சகதொழிலாளரினதும் வெறுப்பைத் தேடிக் கொள்ளாது அவதானமாக இருத்தல் நன்று. விவசாயத்துறையிலீடுபட்டுள்ளோர் சமபலன் காண்பர். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் இருப்பினும் எதிர்பாராத தடைகள், தாமதங்கள் உண்டாகும்.

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

சோதிடத்தில் இவ்வெறும் உணர்ச்சியுள்ள இடத்திற்கு, கிரகங்களுக்கு கொடுத்தது போல ஏன் தசாபுத்தி காலங்கள் கொடுத்தார்கள் என்ற விளக்கம் இல்லையே!

சமயத்தில், உணர்ச்சியுள்ள இடத்திற்கு — சக்திக்கு — உருவம் கொடுத்து, நவக்கிரக வழிபாட்டில் ஏற்றுக் கொண்டார்கள். இங்கும் நிழல் நிஜமாகிறது.

யோகநிலை (Yoga Point), அதிஷ்ட நிலை (Pars Fortuna) யாவும் இராகு கேதுவைப்போல் உணர்ச்சியுள்ள இடங்களானல் இவைகளைக் கையாளும் முறைகளும் ஒரேவிதமாக அமைகின்றதா?

உதாரணத்திற்கு ஒரு அதிர்ஷ்டநிலை 4பாகை சிங்கத்தில் அமைவதாகக்கொள்வோம். அதாவது சூரியராசி (மகம்) கேது நட்சத்திரம் சந்திர உப நட்சத்திரத்தில் அமைகிறது. அதனல் சூரியன் கேது, சந்திரன் முதலியோரின் தொடர்காலத்தில் அதிர்ஷ்ட விதமான சம்பவங்களை எதிர் பார்க்கலாம்.

உதாரணத்திற்கு ஜனதிபதித் தேர்தலில் போட்டியிடுவோர் தங்கள் பத்திரங்களை தாக்கல் செய்த நாளாகிய 17-9-1982ல் காலை 11-00க்கு கிரகநிலைகளையும் அதிஷ்டநிலைகளையும் ஆராய்வோம். (தொடரும்)

### கார்த்திகைத் தீபம்

— செல்வி தேன்மொழி அருளம்பலம் —

கார்த்திகைத் தீபத்தின் ஒளியாம் - நாம்
பார்த்திடில் கிடைத்திடும் அருளாம்
நீர்த்திடும் ஆணவ மலமாம் - வாழ்வில்
உயர்த்திடும் திருவருள் பலமாம்.

ஆணவம் என்பது மாயை - அது
அரிபிரமர் மீதிலும் கண்டார்
வானவர் மீதிலும் கண்ட - பரமன்
அழிந்திடத் தோன்றினன் பிழம்பாய்.

அடிமுடி யில்லாச் சோதியின் - கந்த
அதிசயம் கண்ணுற்ற தேவர்
தேடினர் சோதியின் அடிமுடி - அது
ஊட்டிய தவர்க்கே அறிவை.

ஆணவம் அகற்றியே மக்கள் - இந்த
அகிலத்தில் வாழ்ந்திட வழியே
காணலாம் இத்தீபத்தின் ஒளியால் - அதை
உணர்த்திடும் சைவம் வழியாய்.

# இராகு கேது நிழற் கிரகங்களே!

ச. நிர்மலா
பருத்தித்துறை.

சூரியன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி முதலான கிரகங்களைப்பற்றி எத்தனையோ தகவல்களும் விளங்கங்களும் விபரங்களும் உள. ஆனால் இராகு கேது முதலியோர்களைப் பற்றிய விளக்கங்களும் விபரங்களும் மிகக் குறைவானதே!

இதனால் இராகு கேதுக்கள் வரையறுக்கமுடியாத காலந்தொட்டு நம்மூதாதையர்களால் கையாளப்பட்டு வருகிறது' என்னும் கூற்று முற்றும் முழுதும் தப்பானது என்பதன் அர்த்தம் என்ன.?

ஆனி, ஐப்பசிமாத சோதிடமலர்களில் வெளிவந்த வாதப்பிரதாபங்களைத்தான் இங்கு குறிப்பிடுகின்றேன். அறிவும் அபிப்பிராயும் அவரவர்கள் விளங்கிக்கொள்ளும் தன்மையைப் பொறுத்தது.

உருவவழிபாடு எப்போது ஆரம்பித்தது? அதைக் கூறமுடியுமா? உருவ வழிபாடு ஆரம்பித்தபோதே நவக்கிரகங்களும் நம்மூதாதையர்களின் வழிபாட்டில் இடம்பெற்றுவிட்டன. நவக்கிரகங்கள் என்றால் என்ன? அக்காலத்தில் நவக்கிரகங்களில் இராகு கேது இடம்பெறவில்லையா? வெறும் புள்ளிகளான இராகு கேது ஏன் மற்றும் கிரகங்களுடன் இடம்பெற்றன?

அன்று நம் முன்னோர்களில் திரிஞானிகள் பலர் இராகு கேதுகளை நன்குணர்ந்திருந்தார்கள். அவர்களின் ஞான திருஷ்டியில் பூமிக்கு அருகாமையில் சந்திரனுடனும் சூரியனுடனும் தொடர்புள்ள இருநிழற்புள்ளிகளைக் கண்டார்கள். இவையே இராகு கேதுகளாயின.

விஞ்ஞானம் வளர்ந்த பின்பு இவ் இராகு கேதுகளைப்பற்றி ஆராய்ந்தபோது சூரியனை வலம் வரும் பாதையும் சந்திரனின் பாதையும் இரு புள்ளிகளில் சந்திப்பதையும் அவ்விரு புள்ளிகளே இராகு கேது என அறிந்தார்கள். எனவே திரிஞானிகள் கண்ட நிழல்கள் விஞ்ஞானத்தில் நிஜமாகிறது.

''உண்மையில் பூமியாலும் சந்திரனாலும் ஏற்படுகின்ற நிழல்களே இராகுவும் கேதுவும்'' எனக் குறிப்பிட்டதில் விளக்கமில்லை.

பூமியின் பாதையும் சந்திரனின் பாதையும் சந்திக்கும் இடத்தில் ஏற்படும் நிழல்களே இராகுவும் கேதுவும் என்று கூறியிருந்தால் விளக்கமாயிருக்கும்.

இராகு கேதுகளுக்கு கொடுத்த விளக்கம் மட்டுமே நன்கு அமைந்திருக்கின்றது. மற்றவை எல்லாம் சுத்த அபத்தம்.

''சூரியன் சந்திரன் முதலியோரையே மறைத்து சில விளைவுகளை உண்டாக்கும் இராகு கேதுக்களை ஒதுக்கிவிட முடியுமா? இது (Predictive Side) பலாபலனைப் பற்றியதாய் சூரியன் சந்திரன் முதலியோரின் பலன்களை மறைத்து இராகு கேதுக்கள் செயல்படுவதாகக் கொள்ளலாம். இம்முறை கிருஷ்ணமூர்த்தி பத்ததியில் கையாளப்படுகின்றது.

வான் மண்டலத்தில் இராகு கேதுக்கள் இரு கற்பனைப் புள்ளிகளாகும். (Imaginary Points) அதை எந்தவிதமான உபகரணங்களாலும் பார்க்கமுடியாது. அப்படிப்பட்ட இரு உணர்ச்சிக் கற்பனைப் புள்ளிகளுக்கு ஏன் நம் முன்னோர்கள் மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

,,இரு உணர்ச்சியுள்ள இடங்கள் என்று கணித்தார்களல்லாமல் சாயைகள் என்றோ அல்லது கிரகங்களென்றோ கணிக்கவில்லை'' என்ற கூற்று சிறிது சிந்திக்கவைக்கிறது.

(28-ம் பக்கம் பார்க்க)

# மட்டுநகர் சோதிட மகாநாடு

அருள்வேலழகன்



**★ புதுப்பொலிவு**

மட்டுநகர் நகரமண்டபத்தின் புதுப்பொலிவில், வராகமிஹிரர் அரங்கு பொலிவுக்குப்பொலிவூட்டிக் கொண்டிருந்தது. இந்தப் புதுப்பொலிவுக்கு, சோதிடமேதை திரு எஸ். செல்லத்துரையின் தலைமை மெருகூட்டியது. எங்கும் அமைதி!

**★ ஏன் இந்த அமைதி?**

ஆமாம் தலைவரின் பேருரை சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் இருந்தது; என்பதை நான் கூறித்தான் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிறேன்.

தலைமைப் பேருரை முடிந்தது. இதுவரை அமைதி நிலவிய அந்த மண்டபத்தில் கரகோஷம் முட்டிவழிந்து, வானளாவி உயர்ந்தது. மகாநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில் ஒரு புதுத் தென்பை ஏற்படுத்தியுள்ளது அந்த தலைமைப் பேருரை என்பதை மாநாட்டுப் பிரதிநிதிகளின் அக, முக மலர்ச்சியே எடுத்துக்காட்டின.

**★ உருத்திர வீணை**

இந்த இன்பப் பிரபாகத்தின் மத்தியிலே மேடையிலிருந்து உருத்திர வீணையின் தந்திகள் எழுப்பிய மதுர இசையானது, மாநாட்டுப் பிரதிநிதிகளின் செவிகளில் தேனைப் பொழிந்து ஒரு கிலுகிலுப்பை ஏற்படுத்தியது.

அப்பொழுது தலைவர் எழுந்து 'தசவர்க்கங்கள்' என்னும் தலைப்பில் சோதிடக்கலை சார்பான உரை நிகழ்த்தும்படி, மாநாட்டுப் பிரதிநிதி ஒருவரை அழைத்தார். அத்தருணம் ஒரு கம்பீரமான தோற்றம் எடுப்பான நடை, துடிப்பான செருமல், பண்பான உடை, சிம்ம நடையுடன் மேடையை எய்தியது. அந்தக் கணத்தில் மாநாட்டுப் பிரதிநிதிகள் மட்டுமல்ல, ஏன் நான் கூட நாம் இருப்பது மதுரையில்தானா? மதுரை தமிழ்ச் சங்கத்தில் தானா? என்ற ஐயத்தை ஒருகணம் எழுப்பக்கூடியதாக இருந்தது? காரணம் அங்கு மேடைக்கு உரை நிகழ்த்தவந்த அந்தக் கெம்பீரமான தோற்றமே! எமது பண்டைத் தமிழனின் நினைவை ஒருகணம் எம்மைக் கொண்டுவந்து நிறுத்தியதென்றால் மிகையாகாது.

**★ அது யாருடைய தோற்றம்?**

மேடையில் நின்று சிம்மக் குரலில் தசவர்க்கங்கள் என்ற அந்த சொற்பொழிவை ஆற்றிய அந்த பண்டைத்தமிழனின் தோற்றம் யாருடையது? என்பதை அறிய வாசகர்களின் உள்ளங்கள் ஆசையில் துடித்துக் கொள்வது என் கண் முன்தெரிகிறது. நான் உங்கள் ஆவலை மேலும் சோதிக்க விரும்பவில்லை. இதோ கூறிவிடுகிறேன். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு சோதிடமேதை இலங்கையில் மட்டுமின்றி கடல் கடந்த நாடுகளான அமெரிக்கா போன்ற மேல்நாடுகளுக்குச் சென்று, தன்னுடைய தமிழன் என்ற முத்திரையை நடை, உடை, பண்பாடு போன்றவற்றால் பொறித்து பாரிய சோதிட விஞ்ஞானக் கலாநிதிகள் முன் எமது தமிழ்நாட்டின் சோதிடக் கலையின் தொன்மையை, வன்மையை எடுத்துக் காட்டி, சோதிட பண்டிதர், சோதிட கலாநிதி என்ற பல்வேறு கௌரவப் பட்டங்களைப் பெற்றுத் திரும்பிய பண்டிதர் கே. என். நவரத்தினம் என்பவரின் தோற்றம்தான் அந்தத் தோற்றம் என்பதை நான் வாசகர்களுக்குக் கூறித்தான் தெரிய வேண்டுமா என்ன...? சிம்மக் குரல் முழங்கியது, தேன் தமிழ் பரந்தது. அவைத்தலைவர் அவர்களே! அன்புசால் அவைப் பெருமக்களே! அன்பின் வணக்கம்.

### ★ மைல்கல்

பொழுது புலருகிறது. ஆதவனின் பொற் கதிர்கள் கிழக்கிலிருந்தேதான் நீண்டு இந்த உலகையே ஒளிமயமாக்குகிறது. தமிழன் வாழ்வில் கிழக்கு - வடக்கு தலையானது. கிழக்கின் தலைநகராம் மீன்பாடும் இத்தேனூடாம் மட்டுநகரில், கிழக்கிலுள்ள, வடக்கிலுள்ள இன்னும் பல்திசைகளிலுமுள்ள தமிழ்ப் பெருமக்கள், சோதிடமேதைகள் கூடியிருந்து நமது முதுபெரும் சோதிடக் கலையின் ஆய்வில் இறங்கியிருப்பது, சோதிடக் கலையின் ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு மைல் கல் என்றால் மிகையாகாது.

சோதிடம் பொய் - மூட நம்பிக்கை. அதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று ஜம்பம் அடித்துக்கொள்ளும் ஒரு சிலர் இன்றும் நமது மத்தியில் உண்டு. ஆனால் அந்த மனிதர்களோ காலையில் தினசரிகளைப் பிரித்ததும் இன்றைய பலனையே முதலில் பார்ப்பார்கள் என்பது உலகறிந்த இரகசியம். இந்தச் சோதிடக்கலை இருக்கிறதே இது இன்று கடல்கடந்த நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பா, கனடா போன்ற மேலைத் தேசங்களில் பரவி வருகிறது என்ற உண்மை எப்படியோ! அதே அளவுக்கு எங்கள் தமிழ் நாடுகளிலும் சோதிடக்கலை வளர்கிறது வளர்க்கப்படுகிறது என்பதற்கு இந்த மாநாடு ஓர் எடுத்துக் காட்டாக அமைகிறது.

### ★ திருப்பள்ளி எழுச்சி

எமது சோதிடக்கலை ஒரு தெய்வீகக் கலை. சைவசமயத்தின் பொக்கிஷம். சைவசமய வேதாகமங்களையும், சோதிடக் கலையையும் ஒன்றை விட்டொன்று பிரிக்க முடியாதவாறு பின்னிப் படர்ந்துள்ளது. எமது மதகுருமார் வேதம், ஆகமம், சோதிடம் கற்று; அதை ஐயந்திரிபுற ஆய்ந்துள்ளனர். இப்படியான வேதாகம சோதிட பூஷணங்கள் இன்றும் இக்கலைக்குப் பக்கபலமாக இருந்து வளர்ப்பதாலேயே, இது உச்சியை அடைந்துள்ளது என்பதைக் கூறும்போது மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய விஞ்ஞான உலகான அமெரிக்கா தேசத்திலேயே சோதிடக்கலை உயர்ந்து வளர்ந்துள்ளதை நாம் காண முடிகிறது. பல சோதிட திங்களிதழ்கள் பல்லாயிரக்கணக்கான நூல்கள் போன்ற சோதிட வளர்ச்சிக்கான சஞ்சிகைகள் அமெரிக்காவிலிருந்தே வெளிவருகின்றன. இருந்தும் எமது சோதிடக்கலைக்குத் திருப்பள்ளி எழுச்சி மகாநாடாக இம் மாநாடு அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

### ★ சோதிடமும் பஞ்சாங்கமும்

பஞ்சாங்கம் என்பது சோதிடக்கலைக்கு அடிக்கல்லாக அமைகிறது. வீட்டுக் கட்டிடத்திற்கு அத்திபாரம் எப்படியோ அதே போன்று சோதிடக் கலைக்கு பஞ்சாங்கம் அவசியம். - சோதிடக் கலைஞர்களுக்கு முதலில், பஞ்சாங்கம் பார்க்கும் மதிநுட்பம், நிபுணத்துவம் தேவை. திதி - நட்சத்திரம் ஆகியவற்றின் ஆரம்பம் - முடிவு போன்ற அம்சங்களை சோதிடர்கள் ஐயந்திரிபுறத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதற்கான ஆய்வு, மதிநுட்பம், நிபுணத்துவத்தை சோதிடக் கலைஞர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தச் சோதிடக் கலைஞர்களுக்கு திதி நட்சத்திரங்களின் ஆரம்பம் - முடிவை வைத்துக் கொண்டு, தான் கைக்கொண்டுள்ள பஞ்சாங்கங்களின் கணிப்பு சரியா, பிழையா என்பதை அறியும் ஆற்றல் பெறவேண்டும். சூரிய, சந்திரர் முதலாம் ஒன்பது கிரகங்களும், அச்சுவினி பரணி, கார்த்திகை முதலாம் இருபத்தியேழு நட்சத்திரங்களுக்குமுள்ள தொடர்புகளையே எமது, முன்னோடிகளான, ஞானிகள், ரிஷிகள், சோதிடக் கலையாக வகுத்துள்ளனர். ஆயகலைகள் அறுபத்து நான்கினுக்குள் சோதிடக் கலையும் நன்றாக, அது இந்துசமயத்தின் ஓர் அங்கமாக அமைந்துள்ளது இந்தக் கலையின் உயிர்நாடியாகவுள்ள பஞ்சாங்கம், சுத்தமான கணிப்புமுறையிலிருந்தாலே ஒழிய, சும்மா பேருக்கு இதுவும் பஞ்சாங்கம் தான் என்ற நிலையில் ஒரு பஞ்சாங்கம் இருக்குமாகில் அப்பஞ்சாங்கத்தால் பயனேதும் இல்லை.

மேலை நாடுகளில் சோதிடக்கலை வளர்ந்து வளர்ந்து இன்று சிகரத்தில் துலங்குவதற்குக் காரணம் உண்மையான பஞ்சாங்கக் கணிப்பு முறையேயாகும் என்ற கூற்றை இன்று சர்வ உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே பஞ்சாங்கத்தின் சுத்த கணிப்பை அறிந்து சோதிடக்கலையில் இறங்குவதன் மூலமே, எமது சோதிடக்கலையின் உண்மை, நுணுக்கம், புனிதம் பற்றி உலகறிய முடியும். எமது சோதிடக் கலையின் மதிப்புயரும், எமது சோதிடர்களின் புகழ் உயரும். சோதிடக் கலையின் ஆணிவேரான தசவர்க்கங்களின் கணிப்பும் உண்மையான கணிப்பாக அமையும். சரியான வானசாஸ்திர ரீதியான கணிப்பு முறையற்ற பஞ்சாங்கங்களும் இன்று பஞ்சாங்கம் என்ற பெயரில் நாட்டில் உலவலாம். ஆனால் அவை உள்ளுடன் இல்லாத மோதகம் போன்றவை என்பதை முதலில் கவனிக்கவேண்டும். (வளரும்)

# ஆய்வு மன்றம்

ஆ. அரியராசா, 25/3 சின்னக்கடை வீதி, யாழ்நகர்.

கேது தசை முடியப்பிரச்சினைகள் எல்லாம் ஓரளவாவது விடுபட்டுக்கொண்டேவரும். சந்தாப்பணம் அனுப்பினால் குறித்தவிலாசத்துக்கு மலர் அனுப்பப்படும்.

வி. விஜயலட்சுமி, மருக்காரம்பளை, வவுனியா.

உங்கள் பெயருடன், உங்கள் கணவனரின் தந்தையார் பெயரையும் சேர்த்து T.V. VIJAYA-LADSUMI என எழுதினால் முதலெழுத்துக்கு T.V.V. என்று எழுதினால் நன்மையுண்டு.

செல்வி கலைஅரசி - கண்ணன்,
தையிட்டி, காங்கேசன்துறை.

பக்திசிரத்தையுடன் குலதெய்வ வழிபாட்டுடன் துர்க்காதேவி வழிபாடும் செய்து வருக. கூடியவிரைவில் உமக்குச்சுகம்வரும். கடின கஷ்டமான காலத்தைக் கடந்துவிட்டீர். இனிப்பயப்படவேண்டாம். விரைவில் உமது இடைநிறுத்தப்பட்ட கல்வியையும் தொடரலாம். தன் நம்பிக்கையும் தெய்வவழிபாடுமே அவசியம் வேண்டும்.

எம். பி. பஞ்சலோகரஞ்சன்,
வளலாய், அச்சுவேலி.

உமது கிரகநிலை பின் வருமாறு அமையவேண்டும். இலக்கினம் - மிதுனம். இலக்கினத்தில் சூரியன் - சுக்கிரன், 3-ல் குரு, 6-ல் சனி-இராகு, 9-ல் சந்திரன்-செவ்வாய், 12-ல் புதன் - கேது, சனிதசையில் கேது புக்திமுடிய உமக்கு வேலை கிடைக்கலாம். கடவுளை நம்பி முயற்சிசெய்க. வீண்எண்ணங்களை மனதில் சிந்திக்க வேண்டாம்.

சுப்பிரமணியம் கிருபாகரன்,
ஆரையம்பதி - 1, காத்தான்குடி.

நடப்புக்குருதசையில் வெகு விரைவில் தொழில் கிடைக்கும். குலதெய்வ வழிபாடு செய்துவருக.

வெ. இராமசாமி,
K. G. அல்கொல்ல எஸ்ரேட், நாவலப்பிட்டி.

*1927-09-27* செவ்வாய்க்கிழமை (புதன் கிழமை தவறு) உங்களுக்குச் சாதகமில்லா விட்டாலும் கிட்டத்தட்டப் பிறந்த நேரத்தைக் குறிப்பிட்டிருந்தால், ஆய்வு மன்றம் பலன் கூறுவதில் பொருத்தம் உண்டு. எனினும் உமக்கு இராசி கன்னி எனக்கொண்டால் தற்சமயம் ஏழரை நாட்டுச் சனீஸ்வரன் கோசரசஞ்சாரமும் நிகழுகின்றது. சமசுககாலபலன்களே நிகழும்.

இ. தெய்வேந்திரம்,
பலசரக்குக்கடை, அச்செழு, நீர்வேலி.

வியாபாரத்திலும்; விவசாயத்திலும் மிகு விரைவில் உமக்கு முன்னேற்றம் கிடைக்கும். 7-ல் செவ்வாய் விவாகத் தடை தாமதங்களைச் சமாளித்துச் செயற்பட்டால் மாத்திரமே விவாக சித்தி ஏற்படலாகும்.

சி. சுந்தரலிங்கம், பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.

வைத்தியன் கடவுளுக்குச் சமமானவன். கடவுளில் நம்பிக்கை அவனுக்குக் கட்டாயம் இருப்பதுடன் பக்திசிரத்தையுடன் பூசைகளும் செய்துவருவானானால் நிச்சயம் சித்தியடைவது திண்ணம். எதிர்வரும் சூரியன் தசை தொடக்கம் உமக்கு நல்ல எதிர்காலம் தொடரும். வெற்றி உமது கையிலேயே இருக்கின்றது. முயலுக.

கு. கா. சிறிகணேசன், கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

சனி இலக்கின ராசியில் இருப்பினும் துவாதச பாவஸ்புடப்படி அவர் 2-ம் பாவம் பொருந்துவர். குருவுக்கு 6-ல் சந்திரன் இருப்பது சகடயோகமாகும். ''பாக்கியத்தைச் சிறிது சிறிதாக இழப்பதும், பின் அவ்வண்ணமே அதைப் பெறுவதும் தீர்க்க முடியாத மனச் சஞ்சலமுண்டாவதும்'' சகடயோக பலனாகும்.

கா. சிவகுமாரி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

''செவ்வாய் ஆதி பஞ்சக் கிரகங்கள் ஆட்சி உச்சத்தில் கேந்திரத்தில் இருப்பின்...... ''என்ற விதிப்படி நோக்கின் உமது சாதகத்தில் குருவுக்கு ''அம்சயோகம்'' உண்டாகிறதே! வீண் கவலை வேண்டாம். இந்திரன் (யுரேனஸ்) உம், குபேரன் (புளூட்டோ)உம் சிங்கத்திலும், வருணன் (நெப்ரியூன்) துலாத்திலும் இருப்பர்.

சிவகலா வேலுப்பிள்ளை, தவசிக்குளம், மிருசுவில்.

ஏழரைச் சனீஸ்வரனின் கோசாரசஞ்சாரமும் 6-10-1982-ல் முதல் கழிதலின் நல்ல எதிர்காலம் விரைவில் வரக்காத்துள்ளது. உமது நல்ல எண்ணங்கள் நிறைவுபெற நான்மறை வகுத்த நல் வழிகளில் செயல்படுக.

# 26-11-1982 முதல் 22-12-1983 வரை
# குரு விருச்சிக ராசியில் சஞ்சரிக்குங்கால் நிகழவிருப்பன

பண்டிற் K. N. நவரத்தினம் A. F. A.

1. விகிதாசாரப்படி அதிக பெண்குழந்தைகள் பிறக்கும்.

2. கெட்ட வழிகளிலும், கள்ளக்கடத்தல் முறைகளாலும் பணம் சம்பாதிக்க வழிகளுண்டாகும்.

3. முறையற்ற குழந்தைகள் ஜெனனமாவதும், விஞ்ஞான ரீதியில் சிசு உற்பத்தியாவதும் வெற்றியளிக்கும்.

4. வங்கிக் கொள்ளைகள், திறைசேரி சீர் கெடுதலுண்டாகும்.

5. கள்ளநோட்டு வெளிவருதலும், நாணய மாற்று வீழ்ச்சியும் உண்டாகும்.

6. தங்கத்தின் மாற்றுக்குறைதலும் விலை உயர்தலும் உண்டாகும்.

7. நீதிபதிகள், நியாயவாதிகள், நிதிமன்றங்கள், சட்ட நிருபண சபைகள் பலவீனமடைதலும் நீதி குன்றலும் ஏற்படலாகும்.

8. திறைசேரிகள் பணமுடையால் கஷ்டப் படுதலும், கடன்படுதலும் ஏற்படும்.

9. வெள்ளத்தால் பெரும் அழிவுகள் உண்டு பண்ணும்.

10 உலகப் பெரும்பணம் படைத்தோர் பண முடையால் ஆட்டம் காண்பர்.

11. அரசியல் யாப்பில் திடீர்மாற்றங்கள் ஏற்படலாம்.

12. புரட்டாதி, கார்த்திகை. தை, பங்குனி ஆகிய தமிழ் மாதங்களில் பிறந்தோர் நன்மை யடைவர்.

13. கர்க்கடகம், விருச்சிகம், மீனம் இலக்கினங்களில் பிறந்தோர் சிறந்த பலனடைவர்.

14. உலகிற் சிறந்த மதத்தலைவருக்கு திடீர் மறைவு ஏற்படும்.

15. உன்னத பதவியிலுள்ளோர் மறைதலும் கீழோர் உயர்தலும் உண்டாகும்.

16. தர்மம் அழிந்து அதர்மம் ஓங்கும்.

17. ஐக்கியநாடுகள்சபை ஆட்டம் காணும்.

18. யுத்தபீதிகள் அடுக்கிக் கொண்டே போகும். மூன்றும் உலகயுத்தம் ஏற்படவும் வழி யுண்டாகும்.

19. சட்டசபைகளில் அமைதி குன்றும்.

20. பிரித்தானிய ஐக்கிய ராஜ்ஜியத்தில் அரசியல் மாற்றங்கள் ஏற்படும். துக்ககரமான சம்பவங்களும் நிகழும்.

21. சர்வதேச உளவு ஸ்தாபனங்கள் விருத் தியடையும்.

---

## சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் ஐப்பசிமாதக் கூட்டம் 31-10-82ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 4-30 மணிக்கு பண்டிதர் கே.என். நவரத்தினத்தின் தலைமையில் ஆரம்பமாயிற்று. சென்ற கூட்ட அறிக்கை வாசித்து அங்கீகரிக்கப் பட்டது. பிரம்மஸ்ரீ எஸ். சிதம்பரநாதக் குருக்கள் தமது முந்தியமாதப் பேச்சாகிய விரதங்களும் வியாபகங்களும் பற்றி தொடர்ந்து பேசினர். சென்ற மாதம் பேசிய சிரார்த்த திதி, கார்த்திகை, அமாவாசை விரதம், கிருஷ்ண ஜெயந்தியைத் தொடர்ந்து நவராத்திரி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், மார்கழி ஆருத்திரா தரிசனம், கந்த ஷஷ்டி, கார்த்திகை மாத சுக்கிலப் பிரதமை, சித்திரகுப்த விரதம், மகாசிவராத்திரி விரதத்தின் வியாபகங்கள் பற்றியும், மற்றும் கோவில் உற்சவங்கள் பற்றியும் கூறினர்.

பின்பு கலந்துரையாடலில் இங்கு பேசிய விடயங்கள் பொதுமக்களுக்கும் சில குருமாருக்கும் தெரியாதாகையால் இப்பேச்சை புத்தக ரூபத்தில் அச்சுப்பிரதிசெய்து, இம்மன்றம் அதை விற்பனைக்கு விடவேண்டும் என்றும் தீர்மானிக் கப்பட்டது. அத்துடன் இதுபற்றி தொலைக் காட்சியிலும், வானொலியிலும் காலத்துக்குக் காலம் இம்மன்றத்தால் வெளிப்படுத்த ஒழுங்கு செய்ய வேண்டும். என்றும் தீர்மானிக்கப்பட்டது இத்துடன் மாலை 5-45 மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறியது.

அடுத்த கூட்டம் 28-11-82ல் நடக்கும். அன்று "சோதிடமும் ஆன்மீகமும்" என்னும் விடயம் பற்றி பண்டிதர் கே. என். நவரத்தினம் அவர்கள் பேசுவார்.

# சோதிடம் கற்போம்

''ஞானி"

**3**

கடந்த இதழில் நட்சத்திரங்களையும், அவற்றின் தொகையையும், வடிவத்தையும் பற்றி அறிந்தோம். அவ்வாறு கூறப்பட்ட நட்சத்திரங்கள் அடங்கிய நட்சத்திரமண்டலமாகிய வட்டம் 12 இராசிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வட்டம் இராசி மண்டலம் எனவும் பெயர் பெறும்.

## இராசி மண்டலத்தின் ஆரம்பம்

சூரியன் தனது அயன வீதியில் செல்லும் போது பூமியின் மையப் பகுதியில் (Equatorial-region) வாழும் மக்களுக்கு மார்ச் மாதம் 21-ம் நாள் உச்சம் கொடுக்கும். அப்போது உலகத்தின் எல்லாப்பகுதிகளிலும் பகலும், இரவும் ஒரே அளவாக இருக்கும். இதனை சமராத்திரி தினம் என்றும் சொல்லப்படும். அப்பொழுதே இலை, தளிர், துளிர்க்கும் வசந்த காலம் (Spring season) தொடங்குகின்றது. அதனுல் அக்காலத்தில் சூரியன் இருக்கப்பெறும் இராசியே முதல் ராசியாகக்கொள்ளப்பட்டது. அன்றியும் தங்கள் செல்வமாகிய ஆட்டு மந்தைகளை குறித்தற் பொருட்டு அக்காலத்தை மேட (ஆடு) ராசி என்று பெயரிட்டு வழங்கினர். இதுவே இராசிச் சக்கரத்தின் ஆரம்பஸ்தானமாகும். இது மேஷ ஆரம்பஸ்தானம் (First Point of aries) அல்லது மேஷ ராசியின் ஆரம்பம் அல்லது சூனிய($0^\circ$)பாகை எனவும் கொள்ளப்படும்.

## இராசிகளின் உருவம்

அசுவினி நட்சத்திரத்தையும், பரணி நட்சத்திரத்தையும், கார்த்திகையின் முதற் பாதத்தையும் சேர்த்து ஆகாயத்தில் பார்க்க மேடத்தின் வடிவம் தெரியும். மேடம் என்பது - ஆடு ஆடுபோல தெரிவதால் இந்த ராசி மேட இராசி. என வழங்கப்பட்டது. கார்த்திகை நட்சத்திரத்தின் பின்மூன்று பாதத்தையும் ரோகிணி நட்சத்திரத்தையும், மிருகசீரிடத்து முன்னரையையும், சேர்த்துப் பார்த்தால் ஓர் இடபத்தின் வடிவம் தோன்றும். அது இடபராசி எனப் பெயர் பெறும். இவ்வாறு தோற்றத்தைக்கொண்டு மேடம் முதலிய இராசிப் பெயர்கள் வழங்கப்பட்டன.

## இராசிகளும், அவற்றிற்குரிய நட்சத்திரங்களும்.

$360^\circ$ கொண்ட ராசிமண்டல வட்டத்தில் ஒவ்வொரு ராசியும் $30^\circ$ கொண்ட 12 ராசிப் பிரிவுகளாகும். 12 இராசிகளுக்கும் 27 நட்சத்திரங்களையும் வகுக்க ஓர் இராசிக்கு இரண்டேகால் நட்சத்திரங்கள் அமையும். ஒரு நட்சத்திரம் நான்கு பாதங்களாகப் பிரிக்கப்படும். எனவே ஒவ்வொரு இராசிக்கும் இரண்டேகால் நட்சத்திர வீதம் 27 நட்சத்திரங்களையும் பங்கிடப் பட்டுள்ளது.

| | |
|---|---|
| அசுவினி, பரணி, கார்த்திகை1, | ... மேடம் |
| கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 | ... இடபம் |
| மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 | ... மிதுனம் |
| புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம் | ... கடகம் |
| மகம், பூரம், உத்தரம் 1 | ... சிங்கம் |
| உத்தரம், 2,3,4, அத்தம், சித்திரை 1, 2 | ... கன்னி |
| சித்திரை, 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3 | ... துலாம் |
| விசாகம், 4, அனுஷம், கேட்டை | ... விருச்சிகம் |
| மூலம், பூராடம், உத்தராடம் 1 | ... தனுசு |
| உத்தராடம், 2,3,4, திருவோணம், அவிட்டம் 1, 2 | ... மகரம் |
| அவிட்டம், 3, 4, சதயம், பூரட்டாதி, 1, 2, 3 | ... கும்பம் |
| பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி | ... மீனம் |

மேலே கூறப்பட்ட பன்னிரு ராசிகளும் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்ட வடிவமாயுள்ள இராசிமண்டலத்தை வசதிபற்றி சதுர வடிவமான சக்கரமாக நாம் பின்வருமாறு வழங்கி வருகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| கும்பம் | இராசியமைப்பு | | கடகம் |
| மகரம் | | | சிங்கம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

இவ்விராசிகள் மேடம் தொடங்கி இடபம் மிதுனம் என வலஞ்சுழியாக அமைக்கப்படும். மேற்கூறிய வட்ட வடிவமான இராசிமண்டலத்தில் மேலைத்தேசச் சோதிடர் மேடம் முதலிய ராசிகளை இடஞ்சுழியாக அமைப்பர். அதற்குரிய காரணங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

## சிந்தியுங்கள்

அக்டோபர் 6-ந் திகதி சனி துலாராசிக்கு மாறிவிட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். இதுபற்றி ஒரு சோதிடர் தினசரி ஒன்றில் சனி வான்சாஸ்திரப்படி 6-ந் திகதி மாறியது சரி. ஆனால் பலன்கொடுப்பது அக்டோபர் 28-ந் திகதி (வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ள சனி மாற்றத் திகதி) தொடக்கம் தான் என்று எழுதியிருந்தார்.

ஆனால் எதிர்வரும் வியாழமாற்றத்தில் 26-11-82-ல் வியாழமாற்றம் என வான சாஸ்திரம் கூறுகின்றது. அந்த மாற்றத்துக்கு முன்பே (அதாவது வாக்கிய பஞ்சாங்கத்தில் 18-ந் திகதி வியாழமாற்றம் என்று குறிப்பிட்டிருப்பதால்) 18-ந் திகதியே குரு பலன் கொடுக்கத் தொடங்கிவிடுமா? வாக்கிய பஞ்சாங்கத்தினரைக் கேட்டுத்தான் கிரகங்கள் பலன் கொடுக்கின்றனவா?

*

வர்த்தக ஸ்தாபனங்களின் விற்பனையைப்
பெருக்கிடும் விளம்பர சேவை

மணிக்குரல்
விளம்பர சேவை

பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்

MANIKKURAL

அறிவிப்பாளர்:
மேஜர் ஷண்

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 7

## முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து, உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்,
2. 1-12-1982க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/ இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனம்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 7
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சு | 2 மா | 3 கே | 4 ம | 5 ம் | |
| | 8 ர | 9 ஷ | 10 கோ | 11 தி | 12 அ |
| 13 இ | 14 க | 15 ர | 16 ம் | | 18 வி |
| 19 ரா | 20 ன் | 21 ம் | | 23 ப | 24 ட் |
| 25 நீ | | | 28 க | 29 லீ | 30 ட |
| 31 தி | 32 ரு | 33 வா | 34 சு | 35 க | 36 ம் |

பெயர் ஸ்ரீ வத்ஸலாதேவி [illegible]

விலாசம் [illegible]

[illegible]

**இடமிருந்து வலம்**

1 கிரகங்கள் கிரகங்களுடன் அல்லது நக்ஷத்திரங்களுடன் ஒரு நேருக்கு நிற்றலை இவ்வாறு கூறலாம்.

8 ஆட்சிபுரியும் ஒரு நாட்டின் தலைவருக்கு குழம்பியுள்ள இது உண்டு.

13 சோதிடத்திற்கு அடிப்படையான இது மாறியுள்ளது.

19 இராமாயணத்தின் நாயகன் நிலைமாறியுள்ளான்.

23 இறுதியில் 'டு' சேர்க்க அழகிய துணிவகை பெறப்படும்.

28 பூமியின் மூன்றில் இரண்டு பங்கு ஒழுங்கற்ற இதனல் சூழப்பட்டிருக்கிறது.

31 பஞ்சபுராணங்களில் ஒன்ருன இது தமிழ் வேதமென அழைக்கப்படுகிறது.

**மேலிருந்து கீழ்**

2 தன்தசாபுத்தி காலங்களில் கொல்லுங் கிரகத்தை இப்படிக் குறிப்பிடலாம்.

3 வியாழபகவான் நீசம்பெறும் மாறியுள்ள இவ்விராசியின் அதிபதி சனீஸ்வரனுகும்.

4 மூன்று பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ள திருக்குறளின் ஒருபகுதி ஒழுங்குமாறியுள்ளது.

5 தலைகீழான இதன் இடையில் 'ன' சேர நாளாகிவிடும்.

12 இதன் ஒருபகுதி மகரராசியிலும், மறுபகுதி கும்பராசியிலும் அமைந்துள்ளது.

13 கிரகங்கள் சுற்றிவரும் பாதையை இவ்வாறு சொல்லலாம்.

23 மார்ச், 21-ந் திகதியன்றும், செப்டெம்பர் 23-ம் திகதியன்றும் குழம்பியுள்ள இதன் அளவு சரியாக 12 மணித்தியாலங்கள்.

28 அட்சரகணிதக் குறியீடுகளிலொன்று தலைகீழாயுள்ளது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 6 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. சுதேசநேரம் 7. பஞ்சாங்கம் 13. கிரந்தம் 19. திருத்தலம் 25. துர (வு) 28. அத்தி 32. ஓம் 35. காசி.

**மேலிருந்து கீழ்**

1. சுபகிருது 1. தேசாந்தரம் 3. தஞ்சம் 4. நேத்திரம் 5. அலங்காரம் 6. (ம)கம் 24. சித்தி

**பரிசில் பெறுவோர்;**

1-ம் பரிசு ப. கோகிலதாஸ்
108, பிரதான வீதி, மன்னர்.

2-ம் பரிசு ஆ. சிவஞானசுந்தரம்
ஆத்தியடி, பருத்தித்துறை.

3-ம் பரிசு க. மீனுட்சி
65, கஸ்கிசன் வீதி, திருகோணமலை

மில்க்வைற் ஆதரவாளரின்
நயமும் பயனும் கருதிய

# மில்க்வைற் புதிய பார்சோப்

தொலைபேசி: 7233




தந்தி: மில்க்வைற்

வி. எம். கே. அடையாளமிட்ட சிறிய பார்சோப் தூய்மைக்கு உத்தரவாத முள்ளது. துண்டு துண்டுகளாகவும் வெட்டிப்பயன்படுத்தலாம். நிரம்பிய ஆதாயமுள்ளது. எங்கும் கிடைக்கும். மில்க் வைற் சோப்பை வாங்கி ஆதரவளியுங்கள்.

பாவனையாளர் நலன் கருதி வெளியிடும்

## மில்க்வைற் தொழிலகம் — யாழ்ப்பாணம்

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 39-60 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல்வழி) | வருட சந்தா | ,, 70-00 |
| | இந்தியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 96-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 126-00 |
| | இங்கிலாந்து | (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 3-30 அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. No. Q. B. 59/300/183/82

*Out For Sale*

# THIRUKKANITHA EPHEMERIS
## for 1983
(in English)

*Includes*

* Daily Nirayana Longitudes of all Planets
* Daily Motions
* Table for finding Maha Dasa
* Tables of Houses for Jaffna
* Long & Lat and Time Difference for important towns in Sri Lanka.

It is very important one for every Astrologer in preparing Natal Horoscopes

**Price Rs. 10/=** *(Postage extra)*

*Contact:*

## THIRUKKANITHA NILAYAM
Madduvil, — **Chavakachcheri** P.O. — Sri Lanka.

**FRANCE, ITALY, SWITZERLAND, DENMARK, SOFIA.**

செல்வதற்கு சகல ஒழுங்குகளும் செய்கிருர்கள்

## இம்பீரியல் ரெவல் IMPERIAL TRAVEL

### ஸ்தாபனத்தார்

நேரடியாக Paris செல்வதற்கு விசா, விமானக் கட்டணம் உட்பட ரூ. 11,800/=

செக்கோசிலாவாக்கியா (Prague) ஊடாக அல்லது

Berlin ஊடாகச் செல்வதற்கு ரூபா 9100/=

✶ இரண்டு வழிகளுக்கும் செல்வதற்கு விசா இலவசமாக வழங்கப்படும். ✶

கொழும்பு — சிங்கப்பூர் — கொழும்பு விமானக் கட்டணம் ரூ. 6600/=

மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் மலிவான விலேயில் விமான டிக்கட் பெற்றுக் கொள்வதற்கும், பாஸ்போட் விசா பெற்றுக்கொள்வதற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

## "IMPERIAL TRAVEL"
51, First Floor, First Cross Street, — COLOMBO-11. தொலேபேசி: 26399

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280